Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

போன் 389 | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம் பிலவ ஐப்பசி 1 ஆம நாள் | ஜ. அவ்வல் 6 | (17-10 61) | செவ்வாய்க்கிழமை | இதழ் 210

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# 'ஸ்ரீ' பஸ் இப்பொழுது வேண்டாம்

## பஸ் கமிஷன் முன் யாழ். மேயர் சாட்சியம்

### வேறு நல்ல பஸ்களை அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தமிழ்ப்பேசும் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பரஸ்பர நல்லெண்ணம் ஏற்பட்டு ஒரு சமரச முடிவு ஏற்படும்வரை 'சிறி' இலக்க பஸ்களை இங்கு அனுப்பவேண்டாம்" என்று யாழ்ப்பாண நகர மேயர் திரு. டி. எஸ். துரைராஜா நேற்று பஸ் விசாரணைக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் தகுதியற்ற பஸ்கள் இங்கு நிறைய இருக்கின்றன சிறந்த சேவை செய்வதற்கு இங்கு இன்னும் அதிக பஸ்கள் தேவைப்படுகின்றன என்று மேயர் தெரிவித்தார்.

பஸ் விசாரணைக் கமிஷன் நேற்று முதல்தடவையாக யாழ்ப்பாணத்தில் தனது விசாரணையை ஆரம்பித்தது. மாநகரசபை அறையில் நடைபெற்ற இவ்விசாரணையில், வட இலங்கை பஸ் தொழிலாளர் யூனியன் சங்கத்தின் சார்பில் திரு. ஏ. விஸ்வநாதன், திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் ஆகியோரும் மற்றும் பலரும் சாட்சியமளித்தனர். பஸ் கண்டக்டர் ஒருவர் சிங்களத்தில் சாட்சியமளித்தார்.

மேயர் துரைராஜா சாட்சியமளிக்கும்பொழுது அவருடன் உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரை, திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. பி. எம். ஜோன் ஆகியோரும் சமுகமாயிருந்தனர். மேயர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது சேவைசெய்யும் பஸ்களில் 75 சதவிகிதமான பஸ்கள் சேவையிலிருந்து நீக்கப்படவேண்டியவை. 'மோட்டார் வான்' யாழ்ப்பாணத்தில் பெரும் தொந்தரவு. மேலதிகமான பஸ்கள் இங்கு அனுப்பப்பட்டால் 'வான்' சேவையை முற்ருக ஒழித்துக்கட்டிவிடலாம். பருத்தித்துறை-யாழ்ப்பாணம் ரஸ்தாவில் இப்பொழுது 30 'வான்கள்' சேவைசெய்கின்றன. முல்லைத்தீவுப்பாதையில் எட்டு 'வான்கள்' சேவை செய்கின்றன. இந்த 'வான்கள்' மீது வழக்குத் தொடர பொலிசார் போதிய நடவடிக்கைகள் எடுத்தால் இவைகளின் தொந்தரவுகளை நீக்கிவிட முடியும். ஆனையிறவுதடுப்புக்கடவையிலுள்ள இராணுவத்தினர் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் 'வான்களுக்கும்' இதர வான்களுக்கும் வித்தியாசம் கண்டுகொள்ளலாம்

#### யூனியன் சாட்சியம்

திரு. எச். ஈ. பீரிஸைத் தலைவராகவும் திருவாளர்கள்: டி. எஸ். டி' சில்வா, திரு. ஜே. எச். கிபின் ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்ட இந்த விசாரணைக்கமிஷன்முன் வட இலங்கை ஒம்னி பஸ் தொழிலாளர் யூனியன்சார்பில் திருவாளர்கள்: ஏ. விசுவநாதனும் ஆர். ஆர். தர்மரத்தினமும் சாட்சியமளித்தனர்.

(8ம்பக்கம் பார்க்க)

# சுவர் விழுந்து நால்வர் மாண்டனர்

## மிருகக் காட்சிச்சாலையில் சம்பவம்

கொழும்பு, திங்கள்

தெகிவளை மிருகக் காட்சிச்சாலையின் சுவர்களில் ஒன்று நேற்று மாலை இடிந்து விழுந்ததில் நால்வர் மாண்டனர்.

நேற்றுப் பெய்த பலத்த மழை காரணமாக ஒரு எல்லைச் சுவர் இடிந்து விழுந்தது. சுவருக்கருகே கே. எஸ். சில்வா என்ற கங்காணி சாக்கடைக் கால்வாயைச் சுத்தம் செய்துகொண்டிருந்தார். மற்றும் மூவர் இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுவர் விழுந்ததும் அதன் கீழ் இந்த நால்வரும் அகப்பட்டு நசுங்கினர்.

கங்காணி சில்வாவும் கங்காணியின் நண்பரான ஜஸ்டின் பெரேராவின் மகன் ஆனந்த பெரேராவும் ஸ்தலத்திலேயே மாண்டனர். காயமடைந்தஜஸ்டின் பெரேராவும் மற்றுமொரு சிறுவனை மார்ஷல் பெரேராவும் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிலமணி நேரத்துக்குள் மரணமானர்கள

# இலங்கைத் தூதரின் பூதவுடல் நல்லடக்கம்

## எஸ். ஜே. வி. நேரில் சென்று அனுதாபம் தெரிவித்தார்

லண்டன்

திடீரென காலமான இலங்கை ஹைகமிஷனர் திரு குணசேன டி' சொய்சாவின் மரணச் செய்தி கேட்ட தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் திரு. குணசேன டி' சொய்ஸாவின் இல்லத்துக்குச் சென்று தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

காலஞ்சென்ற குணசேன டி' சொய்ஸாவின் பூதவுடல் திங்கட்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் பிரதமரின் சார்பிலும் பிரான்சிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. ஆர். எஸ் எஸ். குணவர்த்தன கலந்து கொண்டார.

திரு குணசேன டி' சொய்ஸாவின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு முன் பௌத்த மதகுரு மதச் சடங்குகள் நடத்தினர்.

ஈமச்சடங்கில் பிரிட்டிஷ் அரசாங்க பிரதிநிதிகளும் லண்டனிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்து கொண்டனர்.

பூதவுடல் பிரேத வண்டியில் வைக்கப்பட்டு மயானத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் மயான வாசலிலிருந்து பிரேதப் பெட்டியை இலங்கைத் தூதர் காரியாலயத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் நல்லடக்கம் செய்யப்படும் இடத்துக்குச் சுமந்து சென்றனர்.

# 'எதிரி வெட்டியதைப் பார்த்தேன்'

## சங்கானை கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சங்கானை மேற்கு தாளையடியைச் சேர்ந்த அந்தோனி ஆனந்தம் என்பவரை 1960ம்ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் திகதி கொலைசெய்தாக சுப்பர் மயில்வாகனம், சுப்பர் தம்பிமுத்து, கணபதிப்பிள்ளை செல்லத்துரை, சுப்பர் அப்புலிங்கம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். திரு. ஆர். விசுவநாதன் அனுசரணையுடன் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் திரு. ஆ. மாணிக்கவாசகரின் உதவியுடன் எதிரிதரப்பில் ஆஜரானர் திரு. டி. கனகசிங்கம். அரசாங்கத்தரப்பில் எதிரிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

இவ்வழக்கில் முக்கிய சாட்சியான நாகன் பெண் இலட்சுமி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

(8-ம் பக்கம் பார்க்க)

# மீன்பிடிப் படகைக் காணவில்லை

## மயிலிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சனிக்கிழமை காலை மயிலிட்டிக் கடற்கரையிலிருந்து யந்திரப்படகு ஒன்றில் மீன்பிடிக்கச்சென்ற நான்குபேர்களைக் காணவில்லையென்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை ரோயல் விமானப்படையைச்சேர்ந்த விமானங்கள் நேற்று தேடுதல்வேலையில் ஈடுபட்டிருந்தன.

# 'எமது நீண்டகால நட்பு நீடிக்க வேண்டும்'

## இந்தியாவில் மந்திரி இலங்கரத்தின

சென்னை, அக். 15

உணவு வர்த்தகக் கப்பல் போக்கு வரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவின் தலைமையில் இலங்கையிலிருந்து விமான மூலம் புறப்பட்டுவந்த வர்த்தக தூதுகோஷ்டி இன்று சென்னை வந்து பின்னர் டில்லிக்குப் பயணமாகியது.

இத்தூதுகோஷ்டியினர் டில்லியில் யூனியன் வர்த்தக கைத்தொழில் மந்திரி திரு. கே. வி. ரெட்டியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள்.

இத்தூதுகோஷ்டியில் வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, வர்த்தகடைரக்டர் திரு. ஜி. ஆர். டபிள்யு. டி' சில்வா பொருளாதார ஆலோசகர் திரு. ஜே. பி. கெலகமா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் மந்திரி இலங்கரத்தின தெரிவித்ததாவது:-

இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்துடனேயே நாம் இங்கு வந்துள்ளோம்.

ஆதி காலம் தொடங்கியே இந்தியாவுடன் எமக்கு கலாச்சார, பொருளாதார அரசியல் துறைகளில் நெருங்கிய நட்பு இருந்து வந்துள்ளது. அதே தொடர்பு நீடித்திருக்கவேண்டுமென்பதே எமது விருப்பம்.

## வரி விளம்பரம்

**நாவலன்** என்ற பத்திரிகைக்கு நிருபர்கள் தேவை. விண்ணப்பிக்கவும், காரியதரிசி ஸ்ரீலங்கா சைவ ஆதீனம் 128/1/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## நவராத்திரி விழா

ஏழாலை, திங்கள்

ஏழாலை மேற்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் திரு. தா. சண்முகநாதன் அறுகம் புல்லின் சிறப்பைப்பற்றி எடுத்துரைத்தார். 'புதுமைத் திருமணம்' என்ற நாடகமும் நடைபெற்றது.

# பெட்ரோல்கார்ப்பரேஷன் விநியோகத்திட்டம்தயார்

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பெட்ரோல் கார்ப்பரேஷன் அடுத்த ஆண்டுக்குத் தேவையான பெட்ரோல் இறக்குமதி, சேமிப்பு விநியோகம் பற்றிய திட்டங்களைச் செய்து முடித்துள்ளது. இத் திட்டங்களின்படி அடுத்த வருடம் மார்ச்சு மாதம் பெட்ரோல் இறக்குமதி செய்யக் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கவிருக்கிறது. அரசாங்க இலாகாக்களும் அரசாங்க கார்ப்பரேஷன்களும் பொது மக்களும் பெட்ரோல் கார்ப்பரேஷனின் 175 பெட்ரோல் விநியோக நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு, கார்ப்பரேஷன் வசதிகள் செய்யும்.

கொலன்னாவையில் நிறுவப்பட்டுவரும் எண்ணைச் சேமிப்புத் தாங்கிகளின் அமைபபு வேலைகள் அடுத்த ஆண்டு ஆரம்பமளவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெட்ரோல் கார்ப்பரேஷனின் அடுத்த வருடத்துக்கான புதிய சேவையாளர் குழு ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டுவிட்டார்கள். 'ரேஸ்மீட் பிளேஸில்' உள்ள கார்ப்பரேஷனின் தலைமைக் காரியாலயத்தில் புதிய சேவையாளர் குழு ஏற்கெனவே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

## விற்பனை இலாகாவை திருத்தி அமைக்க கமிட்டி

கொழும்பு, திங்கள்

விற்பனை இலாகாவின் விவகாரங்கள் பற்றி விசாரணை செய்து, அவற்றை எவ்வாறு திருத்தியமைக்கலாம். என்பது பற்றி அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கென மூன்று பேர்களைக் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. இன்றைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கேற்ப விற்பனை இலாகாவைத் திருத்தி அமைப்பதால் விற்பனை இலாகா திருப்திகரமாகத் தொழிற்பட்டு வர இலகுவாக இருக்கும். அத்தோடு இலாகா தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் இது உதவியாகவிருக்கும் கீழ் வரும் விஷயங்கள் பற்றி மூன்று பேர்களைக் கொண்ட கமிட்டி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விற்பனை இலாகாவின் தற்போதைய அமைப்பு பற்றியும் அது தொழிற்படுமாற்றலையும் ஆராய்ந்து எவ்வளவு திறமையுடன் இலாகா தொழிற்பட்டு வந்திருக்கிறது என்பது பற்றி அறிக்கை செய்யுமாறு கமிட்டி எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனக் கடைகளும் மற்றைய கூட்டுறவு இலாகாக்களும்நன்கு தொழிற்பட்டு வராத பகுதிகளில் இவ்வியக்கங்கள் சரியாகத் தொழிற்பட்டு வருவதற்கு எவ்வாறு வசதி செய்யலாம் என்றும் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கமிட்டி எதிர்பார்க்கப்படுகிறது.

# மெண்டரஸ் கட்சிக்கு ஆதரவு அதிகரிக்கிறது
## துருக்கி தேர்தல் முடிவுகள்

இஸ்தான்புல், அக். 16

சென்ற வருடம் துருக்கியில் நடைபெற்ற புரட்சிக்குப்பின் நேற்று நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றது என்றாலும் தென் துருக்கியில் ஒரு கிராமத்தில் வாக்களிப்பு நிலையமொன்றின் முன் இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதில் காயமடைந்த பத்துப் பேர்களுடன் மற்றும் 14 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு 450 பிரதிநிதிகளும் செனட் சபைக்கு 150 பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவதற்காக இத்தேர்தல் நடைபெற்றுள்ளது.

இதுவரை கிடைத்த முடிவுகளின்படி இராணுவ ஆட்சிக் குழுத் தலைவரின் ஆதரவுள்ள குடியரசுக் கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைப்பது சந்தேகமாகவுள்ளது.

குடியரசுக் கட்சிக்கு 170 ஸ்தானங்களும் சமீபத்தில் தூக்கிலிடப்பட்ட முன்னாள் பிரதமர் மெண்டரசின் ஆதரவாளர்களின் நீதிக் கட்சிக்கு 160 ஸ்தானங்களும் பார்லிமெண்ட் சபைக்குக் கிடைத்துள்ளன. செனட்சபைக்கும் இதே அளவு வித்தியாசத்தில் தான் இந்த இரு கட்சிகளுக்கும் ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

மற்றுமிரு கட்சிகளுக்கு இதுவரை 66 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

# விசாரணையின் பின்னரே ஆசிரியர் இடமாற்றம்
## கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, திங்கள்

"பூரண விசாரணையின் பின்னரே, ஒழுங்கு நடவடிக்கை காரணமாக ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்னர் பாடசாலை அதிபர்களின் புகார்கள் விசாரணை செய்யப்பட வேண்டும்" இவ்வாறு கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் தமது இலாகாத் தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

"கடைசியாகச் சேர்ந்தவர்களும் குறைந்த தராதரமுள்ளவர்களும் முதலில் போக வேண்டும்" என்ற அடிப்படையில்தான் ஆசிரியர்கள் நியமனம் மாற்றங்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென்றும் இந்த விதிகள் சம்பந்தமாக எந்த மாற்றமும் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்றும் கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

(அ) ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தின்படி ஆசிரியர் இடமாற்றம்; (ஆ) கணவன் மனைவி, கடும் சுகவீனம் ஆகிய காரணங்களைக்கொண்ட கொள்கை அடிப்படையான இடமாற்றம். இந்த இரண்டு அம்சங்களைக் கொண்ட இடமாற்றங்களுக்கு அமைச்சிடம் விசேஷ உத்தரவு பெறத் தேவையில்லையென்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஏஜண்டுகள் தேவை

ஈழநாடு தினசரிப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு அடியில் கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | |
|---|---|
| பத்தனை | ரத்தட்டை |
| கடுகஞ்சேனை | கட்டுகாஸ்தோட்ட |
| டைகாமம் | மாவத்தகம |
| அக்ரப்பத்தனை | குருணகலை |
| தலவாக்கெலே | பண்டாரவளை |
| ரம்படை | வெலிமடை |
| வட்டகொடை | ஹப்புத்தல |
| கந்தகெதர | கொசலாந்தை |
| ஹாலிஎல | |

விபரங்களுக்கு:

**ஜெகஜோதி அன் கோ.,**
14, திருக்கோணமலை வீதி, கண்டி.

## மலைநாட்டில் ஈழநாடு ஏஜண்டுகள்

**கண்டி**
செல்வன் கபே, கட்டுக்கலை.
விமலா ஸ்டோர்ஸ், கொழும்பு வீதி.
ஜெகஜோதி அன் கோ.

**கம்பளை**
ஏ. எஸ். கனகரட்ணம், 3/5, நுவரெலியா ரோடு.
எஸ். பி. செல்லமுத்துப் பிள்ளை.

**மாவத்துர**
தனலெட்சுமி ஸ்டோர்ஸ்.
லெட்சுமி ஸ்டோர்ஸ்.

**உலப்பனை**
திரு. ஏ. கிருஷ்ணசாமி, 275, மெயின் வீதி.

**நாவலப்பிட்டிய**
எஸ். ஞானப்பிரகாசம்.
முருகேசப்பிள்ளை அன் சன்ஸ்.

**கினிகத்தென**
எம். சின்னத்துரை.

**வட்டவளை**
பி. எஸ்.ஏ. முத்தரசு சேர்வை.

**நோர்ட்டன்பிரிட்ஜ்**
ஏ. பிச்சையாபிள்ளை, நியூஸ் ஏஜண்ட்.

**கங்குவத்தை**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்.

**மஸ்கெலியா**
சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்.

**நைன்சா எஸ்டேட்**
நைன்சா ஸ்டோர்ஸ், மஸ்கெலியா.

**நோர்வுட்**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்.

**டிக்ஓயா**
ஏ. நடேசபிள்ளை, மருந்துக்கடை, மெயின் வீதி.

**ஹட்டன்**
இம்பீரியல் ஸ்டோர்ஸ்.

**ரொச்வுட்**
கே. எம். கறுப்பையா, ரோக்வுட் தோட்டம்.

**புசல்லாவ**
ஏ. எம். செல்லமுத்து, செல்வம் ஸ்டோர்ஸ்.

**நுவரெலியா**
எஸ். விருத்தாசலம், நியூவிக்டோரியா ஹவுஸ், றீகல் பில்டிங்.

**ரங்கலை**
பி. எம். சேகு மொஹமட், டக்குவாரி பஜார்.

**ஓவாஎட்ட**
கணேசன் ஸ்டோர்ஸ்,

**தெல்தொட்ட**
சண்முகநாதன் ஸ்டோர்ஸ்.

**கோமர**
கிருஷ்ண ஸ்ரோர்ஸ்.

**பெரிய வேவாக்கொல்லை**
திரு. என். எம். மொஹமட்.

**உளுகங்கை**
அம்பிகா ஸ்டோர்ஸ்.

**கலகா**
சிட்டி பேக்கரி.

**ராகலை**
எஸ். எம். ஆர். எம். எஸ் செல்லையாபிள்ளை, பஜார்.

**நானுஓயா**
ஏ. செம்புலிங்கம்பிள்ளை.

**உடபுசல்லாவ**
எஸ். கோவிந்தசாமி, மெடிக்கல் ஸ்டோர்ஸ்.

**வத்துகாமம்**
பி. எம். பழனியாண்டி பிள்ளை அன் சன்ஸ்.

**உப்புராசி**
பி. எஸ்.பெரியசாமிபிள்ளை.

**பூண்டுலோயா**
ஜயந்தி ஸ்டோர்ஸ்.

# 16,000 க்ஷயரோகிகள் நிதிஉதவி பெறுகின்றனர்
## கொழும்புக்கு முதலிடம் யாழ்ப்பாணம் இரண்டாவது!

கொழும்பு, திங்கள்

பதினாறாயிரம் க்ஷயரோக நோயாளிகள் சென்ற வருடத்தில் அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்றுள்ளனர்.

க்ஷயரோகிகளுக்கு நிதி **உதவி** அளித்த வகையில் சமூக சேவை இலாகா 85,65,362 ரூபாய் செலவிட்டுள்ளதாக சமூக சேவை இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் க்ஷயரோக உதவிநிதி குடும்பத்தைப் பராமரிப்பவருக்கு மட்டுமே வழங்குவதென மட்டுப்படுத்தப்பட்டிருந்ததெனினும் இப்பொழுது க்ஷயரோகிகள் எல்லோருக்குமே, அநேகமாக உதவிநிதி வழங்கப்படுகிறதென்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

சமூக சேவை இலாகா எடுத்த புள்ளிவிபரக் கணக்கின்படி கொழும்பில்தான் மிக அதிகமான குடும்பங்கள் உதவி பெறுகின்றன. கொழும்பில் 3,361 குடும்பங்களும் இரண்டாவதாக யாழ்ப்பாணத்தில் 2,347 குடும்பங்களும் க்ஷயரோக உதவிநிதி பெறுகின்றன. நுவரெலியாவில் தான் மிகக் குறைந்ததொகை. இங்கு 42 குடும்பங்கள் தான் உதவி பெறுகின்றன.

## மரியாதை செலுத்த வெள்ளைக் கொடி

கொழும்பு, திங்கள்

காலஞ்சென்ற திரு. குணசேன டி' சொய்சாவுக்கு மரியாதை செலுத்துமுகமாகக் கூட்டுறவுச் சங்கங்களையும் கூட்டுறவுத்தாபனங்கள் அனைத்தையும் தமது கட்டடங்களில் இன்றுதொடக்கம் வெள்ளைக் கொடி தொங்கவிடுமாறு இலங்கைக் கூட்டுறவு சம்மேளனம் கேட்டுள்ளது.

காலஞ்சென்ற திரு. குணசேன டி' சொய்சா கூட்டுறவு இயக்கத்துடன் பல ஆண்டுகளாகச் சம்பந்தப்பட்டவர் பலவருடங்களாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுகாரராம இவர் கடமையாற்றினர். அத்தோடு கூட்டுறவு விருத்திக் கமிஷனராகவும், உணவு கூட்டுறவு விவகார அவுறச்சின் நிரந்தரக் காரியதரிசியாகவும் இவர் கடமையாற்றினர்.

## களவுபோன கிரீடம் மர்மங்கள் வெளியாயின

கொழும்பு, திங்கள்

இரண்டாம் இராஜசிங்க மன்னன் கிரீடம் கண்டி நூதன சாலையிலிருந்து களவுபோன மர்மங்கள் வெளியாகிவிட்டன. 25 நாட்களுக்கு முன்னர் நடந்த இத் திருட்டு சம்பந்தமாக நாலு பேர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். பொலிஸ் அதிகாரிகள் நடந்திய புலன் விசாரணை விளைவாக கிரீடத்திலுள்ள 41 மணிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

கிரீடம் களவுதுபோன மூன்று கிழமைகளாகப் பொலிஸ் நடாத்திய விசாரணையினால் எதுவும் வெளியாகவில்லை. பிரத்தியோக பொலிஸ் குழுவொன்று அமர்த்தப்பட்டு விசாரணை நடாத்தியதன் பேரிலேயே முடியிலிருந்த மணிகள் 41 கண்டு பிடிக்கப்பட்டன. இவை களனியில் கண்டெடுக்கப்பட்டன. கிடைத்த தகவலின்பேரில் கொழும்பில் நாலு பேரைப் பொலிஸ் கைதுசெய்தது.

நடைபெற்ற புலன்விசாரணையின்பேரில் மணிமுடியின் ஒரு பகுதி உருக்கி அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

செப்டம்பர் 19-ம் திகதி கிரீடம் காணமற்போயிற்று. கூரையின் 'சீலிங்' பலகைகளை அறுத்துத் திருடர் புகுந்தனர். கிரீடம் வைக்கப்பட்டிருந்த கண்ணடிப்பெட்டி உடைக்கப்பட்டுக் கிரீடம் களவாடப்பட்டது.

## 45 நிமிஷத்தில் 4000 றுத்தல் மீன் கடலில் பிடிபட்டது

மன்னார், திங்கள்

மன்னார் பேசாலைக் கடலில் உணவு விவசாயத் தாபனத்தைச் சேர்ந்த மீன்பிடி வல்லுநர் பெரிய மீன்பிடி வள்ளம் ஒன்றில் மீன்பிடித்துப் பரீட்சித்தார். அப்போது 45 நிமிஷங்களில் 4000 றுத்தல் மீன் பிடிபட்டது.

பெருவள்ளங்களின் உதவியுடன் எவ்வாறு மீன் பிடிப்பது என்பதை மன்னாரிலுள்ள மீன்பிடி கடல்களில் இவ்வல்லுநர் திரும்பவும் செய்து காட்டுவார் எனத்தெரிகிறது.

# ஐ. நா. தலைமைக்காரியதரிசி பதவிக்கு பர்மியர்

## அமெரிக்கா-ரஷ்யா உடன்பாடு

### துணைக் காரியதரிசிகள் நியமிக்கப்படுவர்

நியுயோர்க், அக். 16

**ஐ. நா. தலைமைக்காரியதரிசி பதவிக்கு பர்மியப் பிரதிநிதி யு. தாண்ட் என்பவரை நியமிப்பதற்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் உடன்பட்டுள்ளதாக அமெரிக்க பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்சன் தெரிவித்தார்.**

யு. தாண்ட் தான் இருதரப்பாருக்கும் ஏற்றவர் என்று திரு. ஸ்டீவன்சன் கூறினர்.

தலைமைக் காரியதரிசிக்கு துணைக்காரியதரிசிகள் நியமிப்பதற்கு மேற்குநாடுகள் இணங்கியதுதான் தலைமைக் காரியதரிசி பதவி நியமனத்தில் இருந்துவந்துள்ள பிரச்னை முடிவடையக் காரணம்.

துணைக்காரியதரிசிகள் எத்தனை பேரென்பதும் எந்தெந்தப் பிராந்தியத்திலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதும் இனித்தான் முடிவுசெய்யப்பட வேண்டியுள்ளதென்றும் திரு. ஸ்டீவன்சன் கூறினர்.

## அடெளலா கவலை

### ஷோம்பேகை வலுத்துவிட்டது!

லியப்போல்ட்வில்லி, அக். 16

ஐ. நா. பிரதிநிதி கியாரியும் கடாங்கா அதிபர் ஷோம்பேயும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை ஷோம்பேயின் நிலையைவலுப்படுத்திவிட்டதென்று காங்கோ பிரதமர் திரு. அடெளலா கவலை தெரிவித்துள்ளார். என்ருலும் கடாங்காவை காங்கோவுடன் ஒன்றுசேர்க்க நடவடிக்கை எடுக்கும் உரிமை காங்கோ மத்திய அரசாங்கத்துக்குஇருக்கிறதென்று திரு. அடெளலா ஐ. நா. பிரதிநிதி டாக்டர் ஒபிரியனுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

## சிரியாவில் கவர்னர்கள் மாற்றம்

டமாஸ்கஸ், அக். 16

சிரியாவில் மாகாண கவர்னர்களெல்லோரையும் நீக்கிவிட்டு புதிய கவர்னர்களை சிரியா அரசாங்கம் நியமித்துள்ளது. நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ஆகியோர் புதிய கவர்னர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை இந்த கவர்னர்கள் மேற்பார்வை செய்து கொள்வார்களென்றும் வாக்காளர்கள் அபேட்சகர்கள் ஆகியோரின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றும் அரசாங்கம் விடுத்த ஒருஅறிக்கை தெரிவிக்கிறது.

---

## பேர்லினுக்கு ஐ. நா. படை

### பிரிட்டிஷ் எம். பி. க்கள் யோசனை

லண்டன், அக். 16

பேர்லினிலுள்ள நான்கு அரசுகளின் படைகளுக்குப் பதிலாக அங்கு ஐ. நா. படைகள் நிலை கொள்ளவேண்டும் என்று 20 பிரிட்டிஷ் பார்லிமெண்ட் எம். பி.க்கள் ஒரு அறிக்கையில் யோசனை தெரிவித்துள்ளனர்.

பேர்லினில் ஐ.நா. அந்தஸ்து நிலை நிறுத்தப்பட்டுவிட்டால் எவரும் சுயேச்சையாகப் போக்குவரத்துச் செய்ய முடியுமென்றும் பேர்லின் பிரச்சினை தீர்ந்துவிடுமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## இராணுவ ஆலோசகர் புறப்பட்டார்

வாஷிங்டன், அக். 16

ஜனதிபதி கென்னடியின் பிரதம இராணுவ ஆலோசகர் ஜெனரல் மாக்ஸ்வல்டெய்லர் தென் வியட்நாம் அதிபர் ஜிகோடின் டியமைச் சந்திப்பதற்காக இன்று சைவமகானுக்குப் பிரயாணமானர்.

தென்வியட்நாமின் இராணுவ, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள்பற்றி அதிபர் டின்டியத்துடன் அவர் ஆலோசனை நடத்துவார்.

---

## சைகோனில் வெள்ளத்துக்கு 84 பேர் பலி

சைகோன், அக். 15

தென் வியட்நாமில் மீக்கொங் நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக 84 பேர் உயிரிழந்ததாகவும் பெருந்தொகையானேர் வீடு வாசல்களை இழந்துவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. பெருந்தொகையான பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

---

## பால்பதன தொழிற்சாலை

### மதுரையில் நிறுவப்படும்

கோவை, அ . 13

மதுரையில் 41 லட்சம் ரூபாய் செலவில் ஒரு பால் பதன தொழிற்சாலையும், அதேபோல் 13 லட்சம் ரூபாய் செலவில் திருச்சியில் ஒரு தொழிற்சாலையும் நிறுவ இந்திய அரசாங்கத்திடம் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று பால்பண்ணை அதிகாரி ஸ்ரீ வி. ஆர். சதாசிவம் இன்று கோவையில் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலைகள் நிறுவ வேண்டிய இடங்கள் தெரிந்து எடுக்கப்பட்டு விட்டன என்றும், இத் திட்டங்களுக்கு அதிகாரபூர்வ அனுமதி கிடைத்தவுடன் தொழிற்சாலைகளை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்றும் அவர் சொன்னர்.

---

## இந்தி கவிஞர் மரணம்

அலகபாத், அக். 15

பிரபல இந்திக் கவிஞர் சூரியகாந்த் திரிபாட்டி நிரால் இன்று காலை அலகாபாத்தில் காலமானர். இந்தியில் வசனம் கவிதை எழுதிய முதல் கவிஞரான சூரியகாந்த் நாவல்களும், கட்டுரைகளும், கதைகளும், இலக்கிய விமர்சனங்களும் எழுதியிருக்கிருர்.

## 83 வயது மாப்பிள்ளை!

கலிபோர்னியா, அக். 16

நாவலாசிரியரான 83 வயது அப்டன் சின்கிளயர் 79 வயதான மேரி எலிஸபெத் வில்லியம்ஸ் என்னும் பெண்மணியை நேற்று இங்குள்ள ஒரு தேவாலயத்தில் அமைதியான முறையில் திருமணம் செய்து கொண்டார்.

## யு. நு ரங்கூன் திரும்பினர்

ரங்கூன், அக். 16

பர்மா-சீன எல்லை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டபின் பர்மியப் பிரதமர் யு. நு. ரங்கூன் திரும்பினர். பீக்கிங்கில் யு. நுவும் சீனப் பிரதமர் சூ-என்-லாயும் விடுத்த ஒரு கூட்டறிக்கையில் வேறுபட்ட சமுக அமைப்பையுடைய நாடுகளும் நட்புறவுடன் வாழ முடியுமென்றும் அந்தந்த நாட்டின் சுய நிர்ணய உரிமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் ஒவ்வொருநாடும் மதித்து நடக்கவேண்டு மென்றும் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் மற்றெரு நாடு தலையிடக்கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## தமிழ் எழுத்தாளர் கடமை

### பெரியார் புத்திமதி

திருச்சி, அக். 15

திருச்சியில் இன்று தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆருவது ஆண்டு விழா ஆரம்பமானது. இந்த மகாநாட்டில் திராவிட கழகத் தலைவர் ஈ. வே. ராமசாமிப் பெரியார் பேசுகையில் வருங்கால சமூகத்தினர் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தக் கூடிய வகையில் இக்கால எழுத்தாளர்கள் சிந்தனை செய்து எழுதவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு டி. எம். நாராயணசாமிப்பிள்ளை பேசுகையில் தமிழ் எழுத்தாளர்கள் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கக் கூடிய வகையில் எழுத வேண்டுமென்ருர்.

---

## காஷ்மீர் பிரச்சினை

### பாகிஸ்தானில் நடவடிக்கை

கராச்சி, அக். 14

காஷ்மீர் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்காக சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டவும், ஐ. நா. வில் தன் கட்சியை வலியுறுத்தவும் பாகிஸ்தான் சில புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ராவல்பிண்டியில் காஷ்மீர் விவகாரக் கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ ஏ. எச் சான் பத்திரிகை நிருபர்களிடம் குறிப்பிட்டார்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டவும், ஐ. நா. வில் வலியுறுத்தவும் சில நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுவதாக அவர் கூறினர்.

---

## நாடகத்துக்கு பரிசு

கல்கத்தா, அக். 16

தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் நாடகங்களை இந்திய நாட்டின் ஒவ்வொரு மொழியிலும் எழுதும் நாடகாசிரியர்களுக்கு பரிசளிக்கப்படுமென கலாசார விஞ்ஞான அமைச்சர் டாக்டர் ஹிமாயின் கபீர் அறிவித்தார்.

## உ. பி. கலகம்பற்றி விசாரணை நடத்த முஸ்லிம் லீக் கோரிக்கை

திருவனந்தபுரம், அக். 16

"முஸ்லிம் லீக் சம்பந்தமாக காங்கிரஸ் எந்தவிதமான கொள்கையைக் கடைப்பிடிக்கிறதோ அதே கொள்கையை காங்கிரஸ் சம்பந்தமாக முஸ்லிம் லீக் கடைப்பிடிக்க வேண்டும்" என்று கூறும் தீர்மானமொன்று கேரள முஸ்லிம் லீக் கூட்டத்தில் நிறைவேறியது.

முஸ்லிம் லீக்கை காங்கிரஸ் அலட்சியப் படுத்துவதாகவும் கேரளத்தில் ஜனநாயகக் கட்டுக் கோப்பை சீர்குலைக்க முயற்சி செய்யப்படுவதாகவும் கூட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

உத்தரபிரதேசத்தில் சமீபத்தில் நடைபெற்ற வகுப்புக் கலகம்பற்றி பூரண விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றும் கூட்டத்தில் நிறைவேறியது.

இதர கட்சிகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ளும் வாய்ப்புஇருக்கிறதாவென்பது பற்றி ஆராய்வதற்கு ஒரு குழுவும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

---

## தூத்துக்குடியில் ரஸாயன தொழிற்சாலை

சென்னை, ஆக. 14

உப்பங்கழிகளிலிருந்து பொட்டாஸியம் குளோரைட் தயாரிப்பதற்காக ரூ. 10 லட்சம் செலவில் தொழிற்சாலை ஒன்று தூத்துக்குடியில் மத்திய உப்பு ஆராய்ச்சி நிலையத்தினல் விரைவில் நிறுவப்படும் எனத் தெரியவருகிறது. இத் தொழிற்சாலையில் தினமொன்றுக்கு இரண்டு தொன் பொட்டாஸியம் குளோரைட் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## அமெரிக்காவில் 12 அல்ஜீரியர்

வாஷிங்டன், அக். 16

அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தில் காயமடைந்தவர்களில் 12 அல்ஜீரியர் சிகிச்சை பெறுவதற்கும் புனர் வாழ்வு பெறுவதற்கும் அமெரிக்காவுக்கு வந்துள்ளனர். வலது குறைந்தவர்களுக்கு உதவியளிக்கும் அமெரிக்க ஸ்தாபனத்தினல் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

---

## உபதேர்தல் நடைபெற்ருல்

### ராஜரத்ன போட்டியிடுவார்

கொழும்பு, திங்கள்

வெலிமடையில் உபதேர்தல் நடைபெறுமானல் அதில் தாம் போட்டியிடுவதாக சிறையிலிருந்து விடுதலையாகிய முன்னைநாள் வெளிமடை எம். பி. திரு கே. எம். பி. ராஜரத்ன கூறியுள்ளார்.

வெளிமடை உபதேர்தல் காலவரையறை எதுவும் செய்யப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிட்டதுபோல அபேட்சகர்களிடமிருந்து தேர்தல் பத்திரங்கள் அக்டோபர் 18ம் திகதி பெற்றுக்கொள்ளப்படமாட்டா.

திரு. கே. எம். பி. ராஜரத்ன பதுளையில் சட்ட விரோதமான கூட்டமொன்று கூடியதற்காக, அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. வெளிமடை எம். பி. யாகிய அவர் சிறைக்குப் போக நேரிட்டதாலேயே வெளிமடைத் தொகுதிப் பிரதிநிதி ஸ்தானம் காலியாகியது.

## 4 நாட்களில் ஒரு வீடு தயார்

ஹாம்பர்க், அக். 15

அடுக்கி வைக்கப்பட்டுள்ள பாகங்களை ஒன்ருகச்சேர்த்து முடுக்கினல் ஒரு வீடு வசிப்பதற்கு தயாராகிவிடும். இவைகளுக்கு ஆகும் செலவு 6250 டாலர்கள். இவைகளை கொண்டுவந்து சேர்ப்பதற்காக ஆகும் செலவு 2750 டாலர்கள். வீடுகட்டிய ஒரு மாத காலத்திற்குள் வீட்டிற்கு குடிவந்துவிடலாம்.

இந்த வீட்டில் மூன்று அறைகள், ஒரு பெரிய ஹால், ஒரு சமையலறை, குளிக்கும் அறை இவை எல்லாம் உண்டு. மொத்த விஸ்தீரணம் 800சதுர அடி. அவசியமானல் இந்த வீட்டை இன்னும் அகலமாக்கிக் கொள்ளலாம்.

எந்த சீதோஷ்ணநிலையிலும் எந்த காலத்திலும் இந்த 'ரெடிமேட்' வீட்டைக் கட்டிக் கொள்ளலாம். செலவு ஒரே அளவில்தான் இருக்கும். ஒரு வீடுகட்ட எவ்வளவு பேர் தேவைப்படுமோ அதில் 20 சதவிகிதம் இருந்தால் 'ரெடிமேட்' வீட்டை நிர்மாணிக்கபோதும். கப்பலில்கூட இந்த வீட்டுப் பாகங்களை பிற நாடுகளுக்கு அனுப்பிவைக்க முடியும்.

மேற்கு ஜெர்மனியில் 'ரெடிமேட்' வீடுகள் உபயோகிப்பது இப்போது குறைந்த அளவிலேயேதான் இருந்துவருகிறது. ஆனல் 'ரெடிமேட்' வீடுகள் இறக்குமதி 1960 ல் இருந்ததைவிட இரட்டிப்பாகியுள்ளது. வீடுகட்ட ஆட்கள் கிடைப்பது மிகக் கஷ்டமாக இருப்பதால் 'ரெடிமேட்' வீடுகளின் மதிப்பு இன்னும் உயர்ந்துள்ளது.

---

## கிராமபோன் தட்டுகளில் தாகூரின் பாடல்கள்

கோலோன், அக். 15

கவியரசார் ரவீந்திரநாத் தாகூரைப் பற்றியும் அவர் கவிதைகளைப் பற்றியும் நீண்ட காலத்திற்கு முன்பே ஜெர்மனியர்களுக்குத் தெரியும் என்ருலும் அவர் கவிதைகளைப் பாடிக்கேட்டால் எவ்வளவு இனிமையாக இருக்கும் என்பது ஜெர்மனியர்களுக்கு இதுவரை தெரியாது. இப்போது அந்த இனிமையை உணரவும் ரசிக்கவும் ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. தாகூரின் "சியாமா" என்ற நாடகத்தின் பாடல்களை மேற்கு ஜெர்மன் கிராமபோன்கம்பெனி 'தட்டுக்'களாக வெளியிட்டுள்ளது.

---

## மின்சார உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு, திங்கள்

மின்சார உற்பத்தியை அபிவிருத்தி செய்யவும் மின்சார உற்பத்தியை இரட்டிப்பாக்கவும் இதுநகு முதலிடம் அளிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மின்சாரமில்லாமல் கைத்தொழில் அபிவிருத்தி சாத்தியமில்லையென்று விவசாய, நீர்ப்பாசன மந்திரி திரு சி. பி. டி' சில்வா கருதுகிருர். மின்சார உற்பத்தியை அதிகரிப்பதில் அவர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிருர்.

இத் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக மின்சார இலாகா செலவினத்திற்கென 11,77,63,353 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மணி வாக்கு

மதமானது கடவுளோடு மனிதனேயும், மனிதனேடு கடவுளையும் பிணைக்கும் சக்தியுடையது.

—காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 1உ (17-10-61)


EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## மதங்களும் அரசாங்கமும்

எந்தச் சமயத்துக்கும் அரசாங்கம் தீங்கு செய்யாதென்றும், இந்நாட்டிலுள்ள எல்லா மதங்களுக்கும் அரசாங்கம் உதவி செய்யுமென்றும், கல்வி உதவி அமைச்சர் கருணரத்ன ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர். பாடசாலைகளை அரசாங்கம் எடுத்ததும், இங்கு மற்ற மதங்களுக்கு பாதகமேற்படுமென்றே அஞ்சப்பட்டது. இதுவரை அந்த பீதிக்கு இடமில்லாமல் காரியங்கள் நடந்து வருகின்றன. முன் இருந்த மாதிரியே சமய விழாக்களும், அனுஷ்டானங்களும் டைரக்டர் நிர்வாகத்துக்கு மாறிய பாடசாலைகளில் நடந்து வருகின்றன. இவ்விஷயத்தில் அபிவிருத்திக்கு அதிக இடமுண்டு.

பர்மாவிலே பௌத்தத்தை அரசாங்க மதமாகச் செய்ததை, இலங்கையும் பின் பற்றக் கூடுமென்று ஒரு வதந்தி இருந்து வருகின்றது. அவ்வித தவறை இலங்கை அரசாங்கம் செய்யாதென்றே நம்புகிறோம். நாட்டில் பெரும்பாலோர் பின் பற்றும் சமயமென்ற காரணத்துக்காக, பௌத்தத்தை அரசாங்க மதமாக்கினால், மற்ற சமயங்கள் குறைந்த அந்தஸ்து அடைந்து, அதனால் வெகுவாக பாதகமடையக் கூடும். இதையெல்லாம் முன்னிட்டே, இந்தியாவிலே நேருஜியின் அரசாங்கம், சமயச் சார்பற்றதாக இருக்கின்றது. தனிப்பட்டவர்கள் தங்கள் தங்கள் சமய அனுஷ்டானங்களை பின் பற்றலாம். ஆனால் பல பல சமயத்தவரும் கலந்து வாழும் நாட்டிலே எக்காரணம் பற்றியும் ஒரு சமயத்துக்கு மட்டும் முக்கிய மளிப்பது, மக்களிடையே வேற்றுமையும் மனக் கசப்பும் ஏற்பட இடமளிக்கும்.

சமீப வருடங்களில் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக, அரசாங்கம் பொதுப் பணத்திலிருந்து லட்சக்கணக்காகச் செலவழித்துள்ளது. பல நூற்றூண்டுகளாக நசுக்கப்பட்டிருந்த பௌத்தம் புத்துயிர் பெற உதவி அளிக்க வேண்டியதே. அதே போல் இத்தீவில் இரண்டாவது பெரிய சமயமாக விளங்கும் இந்து சமய கோவில்கள் புனரமைப்புக்கு, உதவி செய்யவும் முன் வரவேண்டும். இப்போது ஓரளவு உதவிப் பணம் ஒதுக்கப்படுகிறதென்றாலும் இது போதாது. எல்லாச் சமயங்களுக்கும் பாரபட்சமின்றி உதவி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

மதங்கள் பல இருப்பினும் அவற்றின் பொது நோக்கம் மக்கள் ஒற்றுமையாக நல்வாழ்வு வாழ்ந்து உய்யவேண்டுமென்பதுதான். ஆனால் சில சுயநலமிகள், மதங்களின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி, உயர்வு தாழ்வு கற்பித்து வேற்றுமையையும் துவேசத்தையும் வளர்க்கிறார்கள். இதை நாம் விளக்கத் தேவையில்லை. பல சமயங்களுக்கும் வேற்றுமையை விட பொதுவான ஒற்றுமையே அதிகம். ஆகவே எல்லாச் சமய உண்மைகளையும், எல்லாரும் தெரிந்து கொண்டால், தப்பெண்ணங்களுக்கும் விஷமிகளுக்கும் இட

# பண்டைத் தமிழரின் பண்பாட்டை கூறும் "பதிற்றுப்பத்து"

## சேரமன்னர் பதின்மர்மீது பாடப்பெற்ற நூல்

**யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்திய பாராட்டு விழாவில் பண்டிதர் சு. அருளம்பலம் ஆற்றிய சொற்பொழிவு இங்கு வெளியாகியுள்ளது.**

தமிழ் மொழிக்கணுள்ள இலக்கியங்களுள் காலத்தால் மிகவும் முற்பட்டன சங்க இலக்கியங்களேயாகும். இவைதெள்ளித்தெளிந்த தீந்தமிழ்ச் சொற்களால் இயன்றவை. கன்னற் பாகினை எம்மருங்கிற் சுவைப்பினும் ஆண்டெல்லாம் தித்தித்தல் போலச் சங்கப் பாடல்களும் எப்பகுதியைப் படிப்பினும் ஆண்டெல்லாம் இன்பம் பயத்திலக் காணலாம்.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஆட்சி புரிந்த சேர மன்னர் பதின்மர் மீது சங்க காலப் புலவர் பதின்மரால் பாடப்பெற்றது பதிற்றுப் பத்து. பத்து பத்துக்களின் தொகுதியாதலின் இது பதிற்றுப்பத்து எனப் பெயர் பெற்றது. புறநானூறு முதலிய நூல்களிற் சேர வேந்தரைப் பற்றிய வரலாறு கூறப்படினும் முழுவதும் சேரகுலத்தரசர்களின் வரலாற்றுச் செய்திகளைக் கால ஒழுங்கின்படி கூறுவது பதிற்றுப்பத்து ஒன்றேயாம்.

இந்நூலின் வாயிலாகச் சேர வேந்தரின் வீரம், கொடை, ஆட்சிமுறை முதலியவற்றைப் பற்றியும் பண்டைக்கால மக்களின் வாழ்க்கைமுறை நாகரிகப்பண்பாடு முதலியவற்றைப் பற்றியும் பாணர் கூத்தர் விறலியர் முதலியோரைப் பற்றியும் நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

### வீரத்தில் மிக்கவர்கள்

வீரத்தில் மிக்கவர்கள் சேரமன்னர்கள். மலைபோன்ற பேரரண்களில் வாழ்ந்தாலும் பகைவேந்தர்கள் சேரரின் வலிக்கு அஞ்சி மனம் நடுங்கி வாழ்ந்தார்கள். நெடுஞ்சேரலாதன் என்னும் சேரமன்னன் இமயம் குமரி என்னும் எல்லைகளுக்கு இடைப்பட்ட நாட்டிலுள்ள அரசர்களில் மேலாகக் கூறப்படும் அரசர்களையெல்லாம் வென்று இமயம்வரை தன்னாணையைச்செலுத்தினன். நெடுஞ்சேரலாதனைப் போலவே செங்குட்டுவனும் இமயம் குமரி என்னும் எல்லைகளுக்கு இடைப்பட்ட நாட்டை ஆண்டான் என்பது பதிற்றுப்பத்தினால் அறியலாம். சேரர் சோழ பாண்டியர்களையும் வென்று தமிழகம் முழுவதையும் ஆண்டன. பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பான் குணகுட கடல்களுக்கு இடைப்பட்ட பெருநிலப் பரப்பை ஆண்டமை "இருகடனிருமொரு பகலாடி" என்பதற்பெறப் படும். சேரமன்னர்கள் கடற் போரிலும் வல்லவர்களாய் விளங்கினர்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடல் நடுவே தீவொன்றில் வாழ்ந்த பகைவரைப் பொருதுவென்று அவர் காவலமரமாகிய கடம்பினைத் தடிந்து வீரமுரசு செய்தான் என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது. செங்குட்டுவனும் கடற்போரில் வல்லவனாய் விளங்கினன் என்பது அவனைப் பாணர் பாடியவற்றான் அறியப்படும்.

சேரமன்னர்கள் அறநெறி தவறு ஆட்சிபுரிந்தார்கள். அவர்களின் ஆட்சிச் சிறப்பால் வானம் காலம் பொய்யாது பெய்தது. நிலம் பயனைப் பொழிந்தாற்போல நன்றாக விளைந்தது. சேரரின் அரசியற் சிறப்பால் பசியும் பிணியும் நீங்கின. "மழைவேண்டுபுலத்து மாரிநிற்ப நோயொடு பசியிகழ் தொரீஇப்பூத்தன்று பெருமாரு காத்த நாடே" என்பது அவர் அரசியற் சிறப்பைக் காட்டுவதாகும். மக்கள் பிறர் பிறர் நலியாது வேற்றிப் பொருள் வெஃகாது மையில் அறிவினராய்ச் செவ்விதின் நடந்து, அமர் துணைப் பிரியாது பாத்துண்டு நோயும் பிணியுமின்றி வாழ்ந்தார்கள். நாற்றிசையிலுள்ள மக்களும் பகையின்றி ஒன்றுபோல வாழ்ந்தார்கள். நாட்டிலேதழைகளைச் சூடிப் பெருகி வருகின்ற யாற்றுநீரால் உண்டாகும்பூசல் சேறு பொருந்திய வயல்களில் செல்லும் வண்டிகளின் உருளைகள் சேற்றில் புதைத்தலால் அதனைச் செலுத்துவோரின் பூசல் முதலிய பூசல்களேயன்றிப் போர்ப் பூசல் இல்லாமலிருந்தது. அதனால் மக்கள் சேரரின் ஆட்சிக்குட்பட்ட நாட்டிலேயே வாழ வேண்டுமென்று விரும்பினர்கள்.

### கொடையிற் சிறந்தவர்கள்

சேரர் வீரத்திலன்றி கொடையிலும் சிறந்து விளங்கினர்கள். அதனால் குன்றுகளையும் பல அருவழிகளையும் கடந்து இரவலர் அவர்களைக் காணச் சென்றூர்கள். பரிசிலர் விரும்பிய பொருகளையெல்லாம் வரையாது வழங்கினர் "மாரி பொய்க்குவதாயினும் சேரலாதன் பொய்யலன் நசையே" என்பது வானம் போல வரையாது உவந்து ஈயும் வண்மையைப் புலப்படுத்துவதாகும். கொடைக்கடனமர்ந்த கோடா நெஞ்சினையுடையவர்கள் சேரமன்னர்கள் பரிசிலர்க்கு வேண்டும். பொருளை நல்கியமையால் சேரர் 'பரிசிலர் வெறுக்கை' எனப்பட்டனர். கூத்தர் பாணர் முதலிய பரிசினர் மாக்கள் வல்லினும்வல்லாராயினும் அவர்க்கெல்லாம் பொருளை வழங்கினர்கள். சேரன் செங்குட்டுவன் கடற் போர் செய்து பெற்ற அரிய பொருள்களையெல்லாம் மனங்கொள்ளாப் பாடலையுடைய தரம் போதாத பரிசிலர்க்கும் கொடுத்தான் என்று பாணர் கூறுகின்றூர்.

பாரியைப் போன்ற பெருங் கொடையாளர்களும் சேரர்களில் இருந்தார்கள். பாரி இறந்தபின் அவனைப்போன்ற பெருவண்மையையுடையருவன் செல்வக்கடுங் கோவாழியாதன எனக்கேட்டு அவனைக் காணச் சென்றதாக கபிலர் கூறுகின்றூர். பரிசிலர்க்குவேண்டும் பொருளைத் தொகுத்தளித்துப் பிறர்க்கென வாழ்ந்த பெருமையையுடையவர்கள் சேர மன்னர்கள்.

### விளங்கத்தக்க உரை

இவ்வாறு சேரரின் வீரம், ஆட்சி, கொடை முதலியவற்றையும் பிறவற்றையும் பதிற்றுப் பத்து நன்கு எடுத்துக் கூறுகின்றது. இதன் பொருளை யாவரும் நன்கு விளங்கத்தக்க வகையில் ஓர் உரை இருத்தல் இன்றியமையாதெனக் கண்டு இதற்கு உரை எழுதத் தொடங்கினேன். பாடல்களின் பொருளை நன்கு விளக்கவல்லது ஆராய்ச்சியுரை எனக் கொண்டு மறைமலையடிகள் எழுதிய முறை அமைய இவ்வுரையை எழுதலானேன். சங்க இலக்கியங்களாகிய பத்துப் பாட்டு எட்டுத்தொகை என்பவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றின் உரையையும் துணையாகக் கொண்டு இவ்வுரை எழுதப்பட்டது. பிறநூல்களில் பயின்று வராத சொற்களும் சொற்றொடர்களையும் பதிற்றுப் பத்தில் காணலாம். பதிற்றுப் பத்தின் மூன்றும் பதிப்பு முகவுரையில் இதன் கண் இயன்ற வரையில் விஷயங்களை விளக்கியுள்ளேன்; ஆயினும் எனக்கே தெளிவாக விளங்காத சில பகுதிகள் உண்டு. அவ்விடங்களில் ஏதோ ஒரு வகையாகப் பொருள் எழுதி அமைத்திருக்கின்றேன் என மகாமகோபாத்யாய சாமிநாதையர் அவர்கள் கூறியதிலிருந்து பதிற்றுப்பத்தின் மிடுக்கை நாம் நன்கு அறியலாம்.

## கச்சேரிகள்

மிராது. ஆகவே எல்லாச் சமயங்களின் முக்கிய அம்சங்களடங்கிய நல்ல நூலை வெளியிட்டு, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லாரும் பயில வாய்ப்பளிப்பின் இந்தியாவுக்கும் இலங்கை வழிகாட்டியதாகும்.

கச்சேரிகள், அந்நிய குடியேற்ற ஆட்சிக் காலத்துச் சின்னங்களென்றும், அவை நீடிக்கும்வரை இலங்கையில் உண்மை ஜனநாயகம் நிலைக்காதென்றும், சமசமாஜ் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தெரிவிக்கிறூர். இந்த உண்மையைஉணர்ந்தே காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும், கச்சேரி முறைக்குப் பதிலாக, பிரதேச சபைகளை அமைத்து, மக்களின் பிரதிநிதிகள் கையிலேயே பிரதேச நிர்வாகத்தை வெகுவாக ஒப்புவித்துவிடவேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளார்.

பார்லிமெண்டில் அரசாங்கக்கட்சி முதல்வரான ஸி. பி. டி' சில்வாவும் இதே கருத்தைத் தெரிவித்து ஸ்தலத்திலுள்ள மக்களின் கையில் ஸ்தல நிர்வாகம் இருக்கவேண்டுமென்றும் கூறினூர். இந்தக் கொள்கையை எவ்வளவு சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவந்து கச்சேரி முறையை நீக்கி, பிரதேச சுயாட்சியை ஏற்படுத்துகின்றூர்களோ அவ்வளவும் நாட்டின் அமைதியான முன்னேற்றத்துக்கு வழிசெய்யும். இது வே ஜனநாயகமுமாகும். இதற்கு மாறாக சில வகுப்புவாதிகள் தடையாக நிற்கலாம். அவர்களுக்கு பயந்துவிடாமல், அவசரகாலம் நீடிக்கையிலேயே இவ்வித பிரதேச சபைகளை அமைக்க அரசாங்கம் எல்லா முயற்சிகளும் செய்து, நாட்டில் ஜனநாயகத்தைக் காக்க முன் வரவேண்டும்.

## அதிபர்களுடன் ஆலோசனை

கொழும்பு, திங்கள் வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளில் புதிதாக ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படுவதற்கு முன்னதாக அப்பாடசாலை அதிபர்களுடன் கலந்தாலோசனை செய்யப்படும்.

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை ஒரு கல்லூரியில் சரஸ்வதி பூசை நடந்தது. அக்கல்லூரி அதிபர் ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் என்றாலும் அவர் சரஸ்வதி பூசையில் கலந்து கொண்டதுடன், குருக்கள் கொடுத்த விபூதி பிரசாரத்தை வாங்கி நெற்றியில் பூசிக்கொண்டார். இதைக் காண எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

கம்யூனிஸ்டுகளெல்லாரும் நாஸ்திகர்களென்றும், ரஷ்யாவிலே, சமய ஸ்தாபனங்களுக்கு இடமில்லை என்றும் சிலர் பிரசாரம் செய்வதுண்டு ஆனல் யாழ்ப்பாணத்திலே கம்யூனிஸ்ட் தலைவரும், திருநீறு, சந்தனமிட்டுக்கொண்டு சமய ஆசாரப்படி நடப்பதைப் பார்த்தேன். மற்றவர்களைப் போல கம்யூனிஸ்டுகளிலும் பல பல விதமிருக்கலாமல்லமா?

இதைப் பற்றி முன்னம் ஒரு பெரியவரைப் பேசிக்கொண்டிருந்தேன். ஆண்டவனே ஒரு உண்மையான இலட்சிய கம்யூனிஸ்ட் என்றூர் அவர். நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில் நின்ற நடுவாக இருந்து, எல்லாச் செல்வங்களையும் எல்லார்க்கும் வேலி போடாமல் அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளல் அவர் என்றூர். மேலே பேசுவதற்கு என்ன இருக்கிறது?

* * *

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் 'கெர்ல் கயிட்ஸ்' எனும் பெண் சாரணர்களின் நடன விழாவுக்குச் சென்றிருந்தேன். பல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவிகள் பரத நாட்டியம், கும்மி, கோலாட்டம் முதலியவற்றால் மற்றவர்களை மகிழ்வித்து தாங்களும் மகிழ்ந்தனர். பல கிறிஸ்தவக் கல்லூரி மாணவிகளும், இந்து கலாசார நடனங்களை அழகாக ஆடியதை ஒரு நண்பர் குறிப்பிட்டு, பல வருடங்களுக்கு முன் இது நினைக்கவும் முடியாதென்றும் இப்போது காலம் மாறி வருவதற்கு இதெல்லாம் அடையாளமென்றும் கூறினர்.

யாழ்ப்பாண 'கெர்ல் கைடிட்ஸ்' இவ்வித நடன விழாவை வெற்றிகரமாக நடத்தியதை விட நேரில் கண்ட, கமிஷனரான ஸ்ரீமதி சீதா ராஜசூரிய தமது வியப்பையும் பாராட்டுதலையும் தெரிவித்து மற்ற பகுதிகளுக்கு யாழ்ப்பாணமே வழிகாட்டவேண்டுமென்றூர்.

நம் பெண்களிடையேயுள்ள உயரிய கலைச் செல்வம் நன்கு பயன்பட்டுவாரு இவ்வித விழாக்களை அடிக்கடி நடத்த வேண்டும். பொது மக்கள் ஆதரவு விசேஷமாக இருக்குமென்பதில் ஐயமில்லை. இதனால் சமூக வாழ்வும் மலர்ச்சியடையும்.

* * *

எங்காவது வெளியிலே நடந்து செல்ல வேண்டும் போலிருந்தது. ஒரு நண்பருடனே நல்லூர்ப் பக்கம் சென்றேன். அங்குள்ள கைலாசநாதர் கோவிலில் நவராத்திரி பூசை நடப்பதைக் கண்டேன். ஒரு பெரியவர் லலிதா தோத்திரத்தை நிறுத்தி நிறுத்தி மிக பக்தி சிரத்தையுடன்படித்தார். கேட்போருக்கும் பக்தி பெருகுவதாக இருந்தது. அது சம்பளக் கோவிலல்லவென்றும் சொந்தக் கோவிலென்றும் என் நண்பர் விளக்கினர். எல்லாக் கோவில்களிலும் இவ்விதம் பக்தியை வளர்க்கும்படியாக மந்திரங்களை சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

புதுக்கோட்டையிலே பல வருடங்களுக்குமுன் சில குருக்கள்மார்கள் மச்சுவீடு கட்டி மிகச் சிறப்பாக வாழ்ந்தனரென்றும், அவர்களிடையே சமய ஆசார அனுட்டானங்கள் மேலாக இருந்ததாயும், இப்போது அவர்களது சந்ததிகள் ஆசாரம் கெட்டு,

(8ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

# பஸ் பிரயாணக் கஷ்டம்!

யாழ்ப்பாணத்தில் இப்போதெல்லாம் இ. போ. ச. பஸ்களில் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டமானதொரு விஷயமாகி விட்டது. பஸ்களில் ஏறி பிரயாணச் சீட்டு வாங்குவதற்குப் பகீரதப்பிரயத்தனம் செய்தே ஆகவேண்டும். இதற்கும் காரணம் ஒன்று இரண்டல்ல; பல.

யாழ்ப்பாணத்தில் அதிலும் கே. கே. எஸ். வீதிவழியே செல்லும் பஸ்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. காலை சுமார் 7-30 மணிக்கு பஸ்ஸுக்காகக்காத்து நின்றால் காரியாலயத்திற்கோ பாடசாலைக்கோ 9-30 மணிக்குப் பின் போய்ச் சேரலாம். கவலைப்படவேண்டியதில்லை அல்லவா?

ஒருநாளைக்கு அல்லது இருநாளைக்கு நேரம் பிந்தி காரியாலயத்துக்கோ அல்லது பாடசாலைக்கோ போகலாம்: ஆனால் எப்போதும் இதே கதை என்றால் பிரயாணிகள் என்னதான் செய்வது? நிலைமை வரவர மிக மோசமாகி வருகிறது. போகவேண்டிய இடத்துக்கு ஒரு மணித்தியாலமோ அல்லது அதற்கும் மேலாகவோ தாமதமாகத்தான் போகவேண்டி எற்படுகிறது. காரணம் போதிய பஸ்கள் இல்லாமையே.

இப்படி ஒருமாதிரி போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து பின் திரும்புவதற்கு பஸ்நிலையத்துக்குச் சென்றால் அங்கும் கஷ்டம் தான்.

எல்லோரும் நேரத்துக்குப் போய்ச்சேர வேண்டுமென்று விரும்புவது இயல்பே. ஆனால் பிரயாணிகளை கியூவில் நின்று ஏறச் செய்யவேண்டும். ஒரு சில பஸ்ஸில் ஏற மாத்திரம் கியூ. மற்றும்படி மந்தைக்கூட்டம்போல் இடிபடவேண்டும்.

பெண்கள் நிற்கிறார்களே அவர்கள் முதல் ஏறட்டும் என்று இடம் விடும வழக்கம் சிறிதாவது இருந்தால் போதாதா? அவர்கள் ஏறவேண்டாம் அப்படி முதல் ஏறவிடாவிட்டாலும் அவர்கள் ஏறும் போதாவது சிரமம் கொடுக்காமல் இருக்கலாமல்லவா? அதுதான் கிடையாது. யார் வந்தால் என்ன தாம் இடித்துக்கொண்டு முன்னுக்கு போனால் போதும் என்ற மனப்பான்மை கொண்டவர்களாகப் பலர் நடக்கிறார்கள். கடைசியாக ஒருமாதிரி பஸ்ஸில் ஏறினால் அங்கும் தடைதான். ஏன் தெரியுமா? கண்டக்டர் எங்கே போகிறாய் என்று கேட்பார். சிறிது தூரத்தில் உள்ள ஒரு ஊருக்குப் போகவேண்டியவர்கள் இடத்தைச் சொன்னதும் "இதில் இடமில்லை அடுத்த பஸ்" என்று ஒரே பதில் சொல்லி கீழே இறக்கிவிடுவார்கள் உதாரணமாக கொக்குவில், கோண்டாவில், தாவடி போன்ற இடங்களில் இருப்போருக்கு தினமும் கிடைக்கும் பதில் இதுதான். அவர்கள் ஊரின் பெயரைக் கேட்டதுதான் தாமதம் 'கொக்குவில் கோண்டாவில் இதில் ஏறவேண்டாம் அந்த பஸ்ஸில் போங்கள்' என்றே சொல்லி விடுவார்கள்.

அனேகமாக எல்லா பஸ்ஸிலும் இப்படிக் கூறிச் சிறிய தூரம் பிரயாணம் செய்யும் பிரயாணிகளை எற்றாது விட்டால் அவர்கள் பிரயாணம் செய்வதில்லையா? இப்படி இவர்கள் செய்வதாலே, அப்பிரயாணிகள் 5 மணிக்குப் பஸ் நிலையத்துக்கு வந்தால் 6 மணிக்கு முன் ஒரு நாளும் பஸ் எடுக்க முடிவதில்லை. அப்போ இப்பிரயாணிகளுக்கு விமோசனமே இல்லையா? இவர்கள் என்னதான் செய்ய வேண்டும். கொக்குவில், கோண்டாவில், தாவடி முதலிய இடங்களுக்குப் போகும் பிரயாணிகளுக்கென்று தனியே ஒரு பஸ் சேவை இருந்தால் இவர்களின் கஷ்டம் கொஞ்சமாவது தீருமல்லவா? இ. போ. ச. இக்குறைபாடுகளைக் கவனித்து பிரயாணிகளின் சிரமங்களை நீக்க முயலவேண்டும்.

ஒரு பிரயாணி

தெல்லிப்பழை

# குதிரைப்பந்தயத் தடை
## சட்டங்களுக்குத் திருத்தம்
### உள்நாட்டு அமைச்சு ஆலோசனை

கொழும்பு, திங்கள்

குதிரைப் பந்தயத்தைத் தடை செய்யும் சட்டத்திலும் குதிரைப் பந்தயச் செய்திப் பிரசுரங்கள் பற்றிய சட்டத்திலும் சில மாற்றங்கள் செய்வதற்கு உள்நாட்டமைச்சு ஆலோசனை செய்துவருகிறது.

பிரஸ்தாப சட்டங்களை மீறவும் சட்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கும் வழிகளிருப்பதாகத் தெரிவதால் உள்நாட்டமைச்சு இச்சட்டங்களுக்கு அனுசரணையாகச் சில மாற்றங்களைச் செய்ய உத்தேசித்திருக்கின்றது. இச்சட்ட மாற்றங்களோடு பொலிசாருக்கு மேலதிகமான அதிகாரங்களும் வழங்குவதென இலாகா கருதுகிறது. இரு சட்டங்களை மீறுவோரைத் தண்டனை செய்வதற்குப் பொலிஸுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

சட்டங்களிற் செய்யப்படவிருக்கும் மாற்றங்கள் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கு உள்நாட்டமைச்சர் வெகுவிரைவில் ஒரு மகாநாடு கூட்டவிருக்கிறார். உள்நாட்டமைச்சர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடனும் மற்றைய பொலிஸ் உயர்தர அதிகாரிகளுடனும் இதுபற்றிக் கலந்தாலோசிப்பார்.

இரு சட்டங்களிலும் ஒரு சில குறைகள் இருப்பதால், குதிரைப்பந்தய பிரசுரங்களை வெளியிடுவோர் வெளிநாட்டுக் குதிரைப் பந்தயங்களில் கவனம் செலுத்தி வருகின்றனர். இங்கிலாந்து பந்தயங்கள் பற்றிப் பிரசுரம் செய்வதோடு பந்தயத்தில் கலந்து கொள்ளவும் செய்கிறார்கள். குதிரைப் பந்தய பிரசுரங்கள் தடையுத்தரவு செய்யப்பட்ட பின்னர் குதிரைப் பந்தய புதினங்கள் கையெழுத்துப் பிரதிகளில் இரகசியமாக வாசிப்புக்கு வழங்கப்பட்டு வருகின்றன. குதிரைப்பந்தய பிரசுரங்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதெனினும் தந்திகள் மூலம் குதிரைப் பந்தய புதினங்கள் பெறப்பட்டு வருகின்றன.

—

## யு. என். பி. பொதுவான கட்சி

பொல்காவலை, திங்கள்

பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் பொதுவான ஒரு கட்சி யு. என். பி எனவே, கட்சிக்கு நிதி உதவி அளிக்கும் செல்வந்தர்கள் தமது கட்சி என எண்ணி கட்சியில் மேலதிகமான உரிமை கொண்டாட முடியாது. இவ்வித அபிப்பிராயம் இருந்தால் அவர்கள் கட்சிக்கு நிதி உதவியளிக்காது இருந்து கொள்ளட்டும்.

இவ்வாறு 300 யு. என். பி. இளைஞர் இயக்கங்கள் பங்குபற்றிய யு. என். பி. இளைஞர் மகாநாட்டில் பேசிய திரு. ஜோர்ஸ் கொத்தலாவல தெரிவித்தார்.

## ஐ. நா.வின் உதவியை இலங்கை கோருகிறது

கொழும்பு, திங்கள்

கிராம அபிவிருத்தி இயக்கங்களனைத்தையும் சீர்திருத்தி அமைப்பதற்கு ஐ. நா. வின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. கிராம இயக்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து அபிவிருத்தி வேலைகளைத் தம்முள் ஒன்று கலந்து செய்வதற்கு வழிவகுப்பதுவே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இலங்கையிலுள்ள கிராம முன்னேற்ற இயக்கங்கள் தொழிற்படுமாற்றை ஆராய்ந்து அவற்றைச் சீர்ப்படுத்தியமைப்பதற்கான வகைகளைக் கூறுவதற்கென ஒரு தூது கோஷ்டியை இங்கு அனுப்பும்படி ஐ. நா. வை இலங்கை கேட்டுள்ளது என அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன

இலங்கையில் பல விதமான தாபனங்கள் தாமாகவே தோன்றி கிராம அபிவிருத்திகளில் ஈடுபட்டு வருகின்றன வாகையாலேயே வெளிநாட்டு வல்லுநர்கள் கிராமஅபிவிருத்தி இயக்கங்களை ஆராய்வதற்கு அழைக்கப்படுகின்றார்கள் என அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. வெளிநாட்டவர் அவ்வேலையைச் செய்வது கிராம அபிவிருத்தி இயக்கங்களிடையே குழப்பங்கள் எதுவும் ஏற்படாதிருக்க வாய்ப்பாக இருக்கும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கிராம அபிவிருத்தி வேலைகளுக்குக் கிடைக்கும் மிகக் குறைவான மூலப்பொருளுடனும் கூடிய அபிவிருத்திகளைச் செய்யக்கூடிய வகையில் சிபார்சு செய்யும்படி ஐ. நா. த் தூதுகோஷ்டி கேட்டுக் கொள்ளப்படும். கிராம அபிவிருத்தி தாபனங்களால் செய்யக்கூடியவை எவை என்பது பற்றி தூது கோஷ்டி எடுத்துக்கூறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் சுமார் 8000 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இருந்து வருகின்றன. அத்தோடு 2000காந்த சமித்திகளும் இருக்கின்றன.

—

## அல்ஜீரியாவில் மீண்டும் கலகம்

அல்ஜீரியர்ஸ், அக். 16

அல்ஜீரியாவில்மீண்டும் பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அல்ஜீரியாவிலுள்ள ஓரான் மாகாணத்தில் இரு ஐரோப்பியரை ஒரு அல்ஜீரிய முஸ்லிம் இளைஞர் சுட்டுக் கொன்றுவிட்டு ஓடிவிட்டதால் அங்குள்ள ஐரோப்பியர்கள் அல்ஜீரியர்களின் வீடுகளைத் தாக்குவதற்கு ஆரம்பித்ததைத் தொடர்ந்து பலாத்கார சம்பவங்கள் நடைபெற ஆரம்பித்துள்ளன.

பிரஞ்சுத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எட்டு அல்ஜீரியர் மாண்டனர். ஒரு ஐரோப்பியர் கொல்லப்பட்டார்.

ஓரான் மாகாணத்துக்கு கலகத்தை அடக்கும் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

—

## எழுத்தில் உத்தரவு
### புதிய சட்டம் வரும்?

கொழும்பு திங்கள்

அரசாங்க ஆதரவுள்ள கூட்டுஸ்தாபன டைரக்டர்களுக்கு அமைச்சர்கள் எழுத்து மூலம் உத்தரவுகள் பிறப்பிக்கவும், இந்த கட்டளைகள், டைரக்டரின் வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்படவும் கோரும் புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துவருவதாகத் தெரியவருகிறது.

வருடாந்த அறிக்கையில் அமைச்சரின் கட்டளைகள் சேர்க்கப்பட்டால் அவைபற்றி பார்லிமெண்ட் விவாதிக்க வசதியாக இருக்குமென்று கருதப்படுகிறது.

இந்தஉத்தேசசட்டம்கொண்டு வரப்பட்டால் கண்டனங்கள் வெகுவாகக் குறைந்துவிடுமென நிதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# 'எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும்'
### காரியாதிகாரி யோசனை

முள்ளியவளை, திங்கள்

"எந்தெந்தத் துறையிலே முன்னேறவேண்டும் என்பதற்கு முதலில் திட்டம் வகுத்துக் கொண்டு, எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதற்கு முயற்சிசெய்ய வேண்டும். சிலதுறைகளில் மட்டும் முன்னேறுவதற்கு வழிவகுத்துக்கொண்டு, வேறுசில துறைகளைப் புறக்கணிக்கலாகாது அங்ஙனம் புறக்கணித்தால், உண்மையான முன்னேற்றத்தைக்காண முடியாது.

கிராமாபிவிருத்தி மகாநாடு தண்ணீரூற்றுக் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது அதற்குத் தலைமைவகித்துப் பேசிய கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"மேட்டு நிலங்களைத் தெரிந்து குடியிருப்பாளர்கட்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் தேவையான இடங்களில் கிணறுகளை வெட்டவேண்டும். கால்நடைகளுக்கு மேய்ச்சல்தரை ஒதுக்கவேண்டும், சுதேசிப் பொருள்களை ஆதரிக்க வேண்டும், உதாரணமாக முள்ளியவளையில் உள்ள கிராமமுன்னேற்றச் சங்க நெசவுசாலையில் உற்பத்தியாகும் உடைகளை வாங்கி ஆதரிக்கவேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் பழமரங்களை உண்டாக்கிச் சுயதேவைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

விவசாய உத்தியோகத்தர் முள்ளியவளைக் கிராமசபைத் தலைவர் ஆகியோரும் பேசினர்.

# தொழில் நுட்ப பயிற்சிக்கு மொழிக்கஷ்டம் பெருந்தடை

கொழும்பு, திங்கள்

தென்கிழக் காசியாவில் தொழில் நுட்ப பயிற்சி பற்றி கொழும்புத்திட்டசபை ஆலோசனைக் கமிட்டிக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில், பல நாடுகளும் ஒன்றோடொன்று தொழில் நுட்ப வசதிகளைப் பரிமாறிப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு மொழிக் கஷ்டம் பெரிய முட்டுக்கட்டையாகலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் கூறியதாவது:

தென்கிழக்கு நாடுகளில் வாழும் மக்கள் ஆங்கிலத்தைத் தெரிந்திருப்பதோடு பயன்படுத்தியும் வருகிறார்கள். பெரும்பாலும் உத்தியோகங்களிலும் ஓரளவுக்கு தொழில் நுட்பத் துறைகளிலும் ஆங்கிலம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்ப பாடங்களை ஆங்கிலத்தில் பயிலுவதற்கே பலநாட்டு மக்கள் விரும்புகிறார்கள். தொழில் நுட்ப பாடப்புத்தகங்களும் ஆங்கிலத்தில் எங்கும் கிடைக்கின்றது. தென்கிழக்கு நாடுகள் சிலவற்றில் தொழில் நுட்ப மாணவர்களுக்கு பிரத்தியோகமாக ஆங்கிலம் பயில வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்புத்திட்டத்தின் உதவியால் பிரஸ்தாப மாணவர்களுக்கு ஆங்கிலம் பயிற்றுவிக்க விசேஷ ஆங்கில ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

தொழில்நுட்ப வசதிகளைக் கலந்து உபயோகிப்பதில் நாடுகளிடையே ஏற்கெனவே நல்ல ஒத்துழைபபு இருந்துவருகிறது எனவும் கொழும்புத்திட்டசபையின் அறிக்கை கூறுகிறது.

"மூலதனம் இல்லாத குறையிலும்பார்க்க தொழில் நுட்ப அறிவு இல்லாக்குறை பொருளாதார முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையிடலாம். மூலதனம் எவ்வளவு இருந்தாலும் தொழில் நுட்ப வல்லுனரில்லாதவிடத்து அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து நடாத்த முடியாது.

விவசாயம், மிருகவளர்ப்பு மீன்பிடித்தொழில் ஆகியவற்றின்மீது போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை யென்றும், அரசாங்க வேலைகளிலும் நெசவு வேலைகளிலும் அதிகம் மின்சார யந்திரசாதனம் உபயோகிக்கப்படல் வேண்டும் எனவும் அறிக்கை வலியுறுத்துகிறது.

—

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் பூசைகளையும் சரிவரச் செய்வதில்லை என்றும் அவர்கள் வீடுவாசல்களை இழந்து சங்கடப்படுவதாகவும் ஒரு குருக்கள் தெரிவித்தார்.

ஊதிய விஷயம் எப்படியாயினும், பக்தி சிரத்தையுடன் ஆசாரத்துடன் பூசை செய்பவர்களுக்கு நல்ல பலன் ஆண்டவன்கொடுக்கவே செய்வான். இந்த ரகசியம் பலருக்குப் புரிவதில்லை. என்ன செய்யலாம்!

—

## நாவலர் வித்தியாசாலையில் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

"சைவசமய விழாக்களில் சிறந்த ஒரு விழாவாக நவராத்திரி விழா விளங்குகின்றது. இவ்விழா சைவத் தமிழ்மக்கள் எல்லோரும் ஒருமித்து இல்லங்கள் தோறும் கொண்டாடிவரும் பெரு விழாவாக அமைந்திருப்பது நமது சமயத்துக்குப் பெருமையளிப்பதாகும்".

இவ்வாறு பண்டிதர் சி. சரவணமுத்து வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் பேசும் போது குறிப்பிட்டுப் பேசினார்.

ஆசிரியை க. சிவநிதி ஆசிரியர் திரு. சி. சீவரத்தினம், செல்வி தி. பத்மாசனி ஆகியோரும் பேசினர்.

நாதஸ்வரக் கச்சேரியும் மாணவர் கலாநிகழ்ச்சிகளும் விழாவில் ஏற்பாடாகியிருந்தன.

## கிராமசேவகர் நியமனம்
### 21-ந் திகதி மகாநாடு

கொழும்பு, திங்கள்

கிராம சேவகர் நியமனம் சம்பந்தமாக ஆலோசனை நடத்துமுகமாக மாகாண அரசாங்க அதிபர்களை உள்நாட்டு கலாசார விவகார அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா ஒரு மகாநாட்டுக்கு அழைத்துள்ளார். இந்த மகாநாடு இம்மாதம் 21-ந் திகதி நடைபெறும்.

—

பம்பாய், அக். 16

ஆகாகான் இன்று காலை பம்பாய் வந்து சேர்ந்தார். இஸ்மாலியா சமூகத்தினர் விமான நிலையத்தில் பெருமளவில் திரண்டுநின்று அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆகாகான் ஆறு தினங்கள் இங்கு தங்கியிருப்பார்.

# 'அரசாங்கத்திடம் சரியான திட்டமில்லை'

## டாக்டர் பெரேரா கருத்து

குருநாகலை, திங்கள்

"யு. என் பி. அரசாங்கம் ஆரம்பித்த ஆறுவருடத் திட்டத்தை விட மிக மோசமானது இன்றய அரசாங்கத்தின் பத்து வருடத் திட்டம். அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை. தாங்கள் என்ன செய்கிறார்களென்பதே அவர்களுக்குத் தெரியாது. ஒழுங்கான திட்டமில்லாமல் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவந்து ஆரம்பித்துள்ளது."

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா குருநாகலையில் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

### அரசாங்கத்துக்கு திறமையில்லை

அரசாங்கத்துக்கு நல்ல நோக்கங்கள் இருந்தபோதிலும் அரசாங்கத்தை நடத்தும் திறமை இல்லாத காரணத்தினால் திட்டங்கள் அப்படி அப்படியே நின்று விடுகின்றன.

அரசியல் கண்ணோக்கோடு பார்த்தால் தற்போதுள்ள காலம் மிக முக்கியமானதொன்று. எனவே இன்று என்ன நடைபெறுகின்றதென்பதை நான் மக்களுக்கு விளக்கிச் சொல்ல வண்டியது அவசியம். முன் இருந்த அரசாங்கங்களும் இப்போதுள்ள அரசாங்கமும் முறையான இடத்தை வகுத்து செயல்படுத்தாமையால் மக்களுக்கு தேவையானவற்றைச் செய்யத் தவறிவிட்டன.

### யு. என். பி. யும் எஸ். எல். எப். பி. யும்

யு, என். பி. யும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் முதலாளி வர்க்கத்துக்கேற்றவாறு அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவந்தன ஆனல் சாதாரண மக்களின் அபிவிருத்திக்கேற்ற திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை.

இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு பொறுப்பானவர்கள் யு. என். பி. கட்சியினர் தான். ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி உள்ளூரில் பொருள்களின் விநியோகத்தை அதிகரிக்கச் செய்வதாலேயே அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும்.

### கருவாடு

யு. என். பிக்கு நிதி உதவி வழங்கும் முதலாளிகள் தான் கருவாட்டுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் காரணமாயிருந்தார்கள். கருவாடு வர்த்தகத்தை அரசாங்கம் பொறுப்பேற்றது புத்திசாலித்தனமாகும். ஆனல் உள்ளூரில் கருவாடு விநியோகம் செய்ய அரசாங்கம் போதிய வழி வகுத்திருக்க வேண்டும். இவ்விதம் செய்யப்படாததால் பொது மக்களுக்கு கருவாடு கிடைக்காது போய்விட்டது' இதனல் நியாயமாக கருவாடு விநியோகிக்கப்படுகிறதா என்பதை அந்த அந்த தொகுதி அங்கத்தவர்கள் கண்காணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

### நிதி நிலைமை

சுதந்திரத்துக்குப் பின்னர் பதவியேற்ற எந்த நிதி மந்திரியும் தேசிய பொருளாதாரத்தையும் நாட்டின் வருமானத்தையும் விருத்தி செய்ய புதிய திட்டம் எதையும் கொண்டு வரவில்லை. இந்த மந்திரிகள் எல்லோரும் சில வருடங்களுக்குப் பின்னர் 'நிதியில்லை வரி அதிகரிப்பு' என்ற ஒரே பல்லவியைத் தான் பாடி வந்திருக்கிறார்கள். இதன் காரணம் என்னவெனில், தேசிய அபிவிருத்தி பற்றி என்றும் ஆலோசனை செய்யாது முதலாளி வர்க்கத்தினரைப் பாதுகாப்பதில் தான் அக்கறை காட்டியுள்ளனர்.

மிக விரைவில் நிலைமையை சரிசெய்வோமென நாங்கள் நம்புகிறோம்.

---

நாடக விமர்சனம்

## "நிறைகுடம்"

'நாடக பாணியில் நாடகங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்' என்பதற்கு எடுத்துக்காட்டாக 14-10-61ல் குரும்பசிட்டி சன்மார்க்க நாடக மன்றத்தினரால் சன்மார்க்க சபையில் நடிக்கப்பெற்ற 'நிறைகுடம்' என்ற நாடகம் அமைந்திருந்தது. பல உணர்ச்சியான கட்டங்களை உள்ளடக்கிய இந்நாடகக் கதை இறுதியில் எதிர்பாராத முடிவுடன் இருந்தமை ரசிகர்களை மலைக்க வைத்துவிட்டது.

இந்நாடகத்தில் ஜெயதேவனை நடித்த க. கோபிநாத் மந்திரி மகிபாலர் களவாட வந்த கட்டத்திலும், குற்றம்சாட்டி அரசன் முன் நிறுத்தப்பட்ட வேளையிலும், நாடு கடத்தப்படும் சந்தர்ப்பத்திலும் பல்வேறு உணர்ச்சிகள் பீறிட திறம்பட நடித்தார். மந்திரி மகிபாலராக நடித்த த. பொன்னுத்துரை களவெடுக்கும்போதும், கைலஞ்சம் கொடுத்து ஜெய தேவனை மருட்டும் காட்சியிலும் இயற்கையாக நடித்தமை அற்புதமாக இருந்தது. மன்னன் வேங்கையன் நடிப்பில் மிடுக்கு இருந்தது. வீரப்புலி, வாள்வெட்டி என்ற நகைச்சுவைப் பாத்திரங்கள் தாங்கிய க. கணேசன், த. புவனேந்திரன் மண்டபம் அதிரும்படி சிரிக்கும் வண்ணம் நன்கு நடித்தனர்.

இந்நாடகம் பல அம்சங்களிலும் சிறந்து விளங்கிய போதிலும் சில குறைகளும் இருக்கத்தான் செய்தன. மேடை நிர்வாகத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆயுதச்சாலையில் மட்டும் அமைப்புகள், திருப்தியாய் இருந்தன. மற்றக் காட்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. கர்நாடக சங்கீதம் புகுத்தப்பட்ட இந்நாடகத்தில் ஒரு கட்டத்தில் சினிமாப் பாட்டு எதற்காகப் புகுத்தப்பட்டதோ தெரியவில்லை. ஆரம்பம் முதல் முடிவு வரை நாடகம் விறுவிறுப்பாக இருந்தாலும் சில இடங்களில் வசனங்கள் அபரிமிதமாக இருந்தன. இது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். பின்னணி நன்கு அமைந்திருந்தது. தயாரிப்பாளரின் அனுபவம் நாடகம் முழுவதிலும் பிரதிபலித்தது.

—இரசிகன்

---

## பாட்டுத் திறன் வேண்டும்

— "திமிலைத்துமிலன்" —

பாட்டுத் திறன் வேண்டும் — பராசக்தி
பாட்டுத் திறன் வேண்டும் — அந்தப்
பாட்டுத் திறத்தாலே — உலகினைப்
பாலித்திட வேண்டும்.

வீட்டில் குடிசையிலே — தொழில்பல
மேன்மையுற வேண்டும் — இந்த
நாட்டுச் செழுமையிலே — வறுமையின்
நாடி விழ வேண்டும்.

கூட்டு முயற்சியிலே — நலம்பல
கூடிவரல் வேண்டும் — செந்நெற்
சூட்டுக் களத்தினிலே — பொன்னை அள்ளித்
தூக்கி வரல் வேண்டும்.

வீட்டுத் தொழுவத்திலே — பின்புறத்து
வேலி மறைப்பினிலே — கண்
காட்டும் பருவத்திலே — கவிசெயக்
கற்றுத் தர வேண்டும்.

சேற்று நிலத்தினிலே — இளம்பயிர்
சேர்ந்து வளர்வது போல் — அருட்
தூற்றல் விழுவதிலே — கலைஒளித்
தோற்றம் பெற வேண்டும்.

ஆற்றின் அருகினிலே — ஓடமொன்று
ஆக்கித் தரவேண்டும் — அதில்
நேற்றை மறந்துவிட்டே — புதுமையில்
நீந்தி வரல்வேண்டும்.

சீற்றம் தவிர்ந்திடவே — புதுப்புதுச்
சிந்தை தரவேண்டும் — கலை
ஆற்றல் பயன் தரவே — பொறையினை
ஆளுந் திறன் வேண்டும்.

நீற்றும் புடமெனவே — கழங்கமில்
நெஞ்சம் தரவேண்டும் — எவர்
தூற்றிய போதினிலும் — குலைந்திடாத்
தூய்மை நிலை வேண்டும்.

போற்றிப் பயன் பெறவே — உனதடிப்
பூக்கள் தரவேண்டும் — களைப்பு
ஆற்றும் திறத்தினிலே — ஓவியங்கள்
ஆக்கித் தரவேண்டும்

கேடடுச் சரணடைந்தேன் — அம்மா நின்றன்
கீர்த்தியெலாம் தருவாய் — வீணை
யாட்டிற் சுகிப்பவளே — புவனங்கள்
யாவையும் ஆள்பவளே!

---

## நாவலப்பிட்டியில் நவராத்திரி விழா

நாவலப்பிட்டி, திங்கள்

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்ட நவராத்திரி விழா நகரின் பல்வேறு வட்டாரங்களிலும் தோட்டங்களிலும் கோலாகலமாக நடைபெற்றுவருகின்றன. வீடு தோறும் கொண்டாடப்பட்டுவரும் இவ்விழா இப்பகுதியில் சமய சமுக ஐக்கியத்தையும் உண்டு பண்ணிவருகிறது. பல்வேறு மதத்தினரும் இனத்தினரும் கூட இவ்விழாவில் கலந்து பராசக்திக்கு அஞ்சலி செய்கின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆத்மஜோதி நிலயத்தில் இவ்விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின்னர் மற்றும் இல்லங்களிலும் தினசரி நடைபெற்று வருகிறது. அலங்கரிப்பதிலும் கொலுவைப்பதிலும் சிற்றுண்டிகள் வழங்குவதிலும் கூட நாளுக்கு நாள் புதிய மாறுதல்கள் காணப்படுகின்றன. இவ்விழாவில் பிரார்த்தனை, இசை விருந்து, பேச்சு என்பன முக்கிய நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. முக்கியமாக இப்பகுதி பெண்மணிகள் இவ்விழாவை கோலாகலமாக கொண்டாடுவதில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

---

## மல்லாந்தையில் சனி பகவானுக்கு விழா

நாவலப்பிட்டி, திங்கள்

நாவலப்பிட்டியைச் சேர்ந்த மல்லாந்தை பஜாரில் உள்ள பிள்ளையார் கோவிலில் புரட்டாசி கடைசிச்சனிவாரம் ஒரே கூட்டமாகக் காணப்பட்டது. சனிபகவானை வணங்குவதற்காக நாவலப்பிட்டி பட்டினத்திலிருந்தும் தோட்டப்பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்திருந்தனர்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.



மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:

- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணாகலை.
- என். எச் குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் [illegible]
- [illegible]
- [illegible] கே. பீட்டர் [illegible] அன் பிரதர்ஸ், பதுளை.
- [illegible] ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே
பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை
யளிப்பதும் இதுவே

சக்தி பலம்




முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 17-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஆர். வடிவேலு - கதாப்பிரசங்கம்.

இரவு 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச்சித்திரம். 9-45 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 மாலதி வெங்கடராமன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை. 2-10 மாலதி வெங்கடராமன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீகம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 மாயவரம் எஸ். ராஜம் - பாட்டு, 9-15 'ஈதலும் இரத்தலும்' - நாடகம், 9-30 நாட்டுப்பாடல் தொகுப்பு, 9-50 இலக்கியவாசகம்.

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இளவாலை அர்ச் ஹென்றி அரசர் கல்லூரியினருக்குமிடையில் நடைபெற்ற முதலாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் யூனியன் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

ஃ ஃ ஃ

இளவாலை அர்ச் ஹென்றி அரசர் கல்லூரிக்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியினருக்கும் நடைபெற்ற இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் அர்ச் ஹென்றி அரசர் கோஷடியினர் 1—0 கோல்களால் வெற்றியீட்டினர்.

ஃ ஃ ஃ

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற முதலாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி வீரர்கள் 1—0 கோல்கள் போட்டு வெற்றியீட்டினர்.

ஃ ஃ ஃ

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி கோஷ்டியினர் 1—0 கோல் போட்டு வெற்றியீட்டினர்.

## சங்கிலி திருடினர்

### ஒருவருடச் சிறை

சாவகச்சேரி, ஞாயிறு

புங்குடுதீவைச் சேர்ந்த வைத்திலிங்கம் பாலசிங்கம் என்பவர் மீசாலையைச் சேர்ந்த சபாரத்தினம் மகள் இராஜேஸ்வரியின் கழுத்திலிருந்து 250 ரூபாய் பெறுமதியான சங்கிலியைக் களவாடியதாக சாவகச்சேரி பொலிசாரால் குற்றம் சாட்டிக் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதின் பேரில் நீதிபதி ஒரு வருடக் கடுழிய சிறைத் தண்டனை விதித்து இரண்டு வருடம் பொலிஸ் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

## காளியம்மன் ஆலயத்தில் தீக்குளிப்பு

அக்கரைப்பற்று, திங்கள்

கிழக்கு மகாணத்திலே பழம் பெருமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்ருன அக்கரைப் பற்றுக் காளி அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் கடந்த 8 தினங்களாக நடைபெற்று வந்த விசேஷ வைபவங்களைத் தொடர்ந்து புதன் கிழமை அதிகாலை தீக்குளிப்பு விழா நடைபெற்றது.


# குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

## ஜெகஜோதி அன் கோ,

குருநெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

## செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிச விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

# மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனி உருந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது




மொனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் - ரோஸ்
அடையாள மிட்டு




இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

## ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.


## "முஸ்லிம் ஆசிரியர்களின்சேவை மிக முக்கியமானது"

### வித்தியாதரிசி பேச்சு

அக்கரைப்பற்று, திங்கள்

"நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் முஸ்லிம்கள் குடியேறி வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்களின் எதிர்கால முன்னேற்றம் இன்றுள்ள இளம் ஆசிரியர்களாக இருக்கும் உங்கள் கையில் தான் தங்கியிருக்கிறது" என்று அட்டாளைச்சேனை அரசினர் இஸ்லாமிய ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், அகில இலங்கை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வித்தியாதிகாரி திரு. எச். வர்ணகுரியா குறிப்பிட்டார். கூட்டத்திற்கு கலாசாலையின் அதிபர் ஜனுப். ஐ. எல். எம். மசூர் தலைமை வகித்தார்.

திரு வர்ணசூரிய மேலும் கூறியதாவது:-

தங்கள் ஊருக்கு சமீபமான இடத்திலோ, ஊரிலோ கடமையாற்ற வேண்டுமென்று நினையாது பிற்போக்கான கிராமங்களில் தாராள மனத்தோடு சேவை செய்ய வேண்டும். அப்பேதுதான் எதிர்காலத்தில் முஸ்லிம் சமுகம் ஒரு பிரகாசமுள்ள சமுகமாகத் திகழும். ஆசிரியர்கள் என்னும்போது வெறும் சம்பளத்துக்கு மாத்திரம் வேலை செய்பவர்களாக இருக்கக்கூடாது. சமுதாயத்தின் விழிப்புணர்ச்சிக்கு உழைப்பவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியத் தொழில் ஒரு புனிதமான தொழில். இந்தத் தொழிலைப் புனிதமாகச் செய்யவேண்டும்

## உயர்வாணிப தகுதிப்பத்திரப் பரீட்சை

### பெண்ணுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியினல் ஆகஸ்டு 7-ந் திகதி நடாத்தப்பட்ட உயர்வாணிப தகுதிப்பத்திரப் பரீட்சையில் தமிழ்ச் சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பிரிவில் தோன்றிய இரு மாணக்கர்களும் சித்தியடைந்துள்ளனர். தமிழ்ச் சுருக்கெழுத்து - தட்டெழுத்துக் கலைகளில் அதி உயர்ந்த தகுதியை இலங்கையிலேயே முதன் முதலாக புங்குடுதீவைச் சேர்ந்த செல்வி பத்மாவதி கணபதிப்பிள்ளை பெற்றுள்ளார்.

ஆங்கில மொழி மூலம் பரீட்சை எடுத்த மூவரில் அக்குறசையைச் சேர்ந்த ஜனுப். எம். எஸ். என். ஜிவ்றி என்பவரும், கைதடியைச் சேர்ந்த என். பாலசிங்கம் என்பவரும் கணக்குப்பதவியல் பிரிவில் சித்தியடைந்துள்ளனர்.

## ரேயல் விளையாட்டுக் கழக நிர்வாகிகள்

காங்கேசன் துறை, திங்கள்

வடமாகாணத்தில் முன்னணியில் திகழும் சிறந்த விளையாட்டுக் களகங்களில் ஒன்ருன காங்கேசன் துறை ரேயல் விளையாட்டுக் கழகத்தின் 13-வது வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் திரு. ரி இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது மேற்படி கழகத்திற்கென ஓர் புதுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கழக அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டன.

ரேயல் விளையாட்டுக் கழகத்தால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் வடமாகாண விளையாட்டுக் கழகங்களின் 2-வது வருடாந்தசுற்றுப்போட்டியை நவம்பர் மாதம் 4-ந் திகதி ஆரம்பிப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் 1961-62 -ம் வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

## பெற்ருர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

சாவகச்சேரி, திங்கள்

பிள்ளைகள் பாதனை மூலமும் சாதனை மூலமும் கற்பதை விடப் பிறபற்றல் மூலமும் எத்தனையோ நல்ல பழக்கங்களையும் தீயபழக்கங்களையும் மற்றையோர் தூண்டுதலின்றிப் பழகுகிருர்கள். ஆதலால் பிள்ளைகளை வளர்க்கும் விஷயத்தில் பெற்ருேரும் ஆசிரியரும் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். சேர் இடம் அறிந்து நல்ல வர்களுடன் கூடிப் பழகச் சேர்த்துவிட வேண்டும். பிள்ளைகளுடைய இஷ்டப்படி தீயவர்களுடன் கூடவிடக் கூடாது.

இவ்வாறு கல்விளான் அரசினர் பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தலைமையாசிரியர் திரு. செ. மயில்வாகனம் குறிப்பிட்டார்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர் திரு. செ. மயில்வாகனம், உபதலைவர் திரு. சு. பரமலிங்கம், காரியதரிசி திரு. து. செல்வராசா தனதிகாரி திரு. இ. ஐயம்பிள்ளை.

## ரெக்கற் கிளப் வெற்றி

சுன்னுகம், திங்கள்

சுன்னுகம் ரெக்கற் கிளப் தாச்சி விளையாட்டுக் கோஷடிக்கும், இணுவில் கோஷ்டிக்கும் இடையில் நடந்த சிநேகபூர்வமான தாச்சி விளையாட்டுப் போட்டியில் 'ஏ' பிரிவு 2-1 பழங்களும் 'பி' பிரிவு 9-0 பழங்களும் பெற்று இணுவில் கோஷ்டியை சுன்னுகம் ரெக்கற் கிளப் தோற்கடித்தது. 'பி' பிரிவு அரை நேரத்துடன் ஆட்டம் முடிவுற்றது.

ஐ. செல்லத்துரை மத்தியஸ்தர கக் கடமையாற்றினர்.

## சகல மதங்களுக்கும் உதவி கிடைக்கும்

### உதவி மந்திரி அறிவிப்பு

வாரியப்பொல, ஞாயிறு

"இன்றைய அரசாங்கம் ஜனநாயக அடிப்படையில் அமைந்துள்ளதால் எவரும் அஞ்சாமல் தங்கள் கடமைகளைச் செய்யலாம்" என்று உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்தின வாரியப்பொல பமுன கொத்துவ அரசினர் பாடசாலையில் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னைய அரசாங்கங்களின் கீழ் வசதிபடைத்த ஒரு சிலருக்கே கல்வி கிடைக்கக் கூடியதாக இருந்ததென்றும் இன்றைய தேசிய கல்வித் திட்டத்தின்கீழ் சகலரும் நன்மையடைவார்களென்றும் திரு. கருணரத்தின கூறினர்.

"எந்த மதத்துக்கும் அரசாங்கம் கெடுதி செய்யாது. இந்தநாட்டிலுள்ள சகல மதங்களுக்கும் அரசாங்கம் உதவி புரியும்" என்று திரு. கருணரத்தின தெரிவித்தார்.

வாரியப்பொல எம். பி; குளியாப்பிட்டி எம். பி. ஆகியோரும் இவ் வைபவத்தில் பேசினர்.

---

போஷகர்: திரு.எஸ். கிருபாமூர்த்தி, உபபோஷகர்கள்: திருவாளர்கள் ஏ. பிறிட்டோ, வி. இராமலிங்கம், ரி. திருநாவுக்கரசு, ஏ. சங்கரப்பிள்ளை, கே. சண்முகநாதன். தலைவர்: திரு. ரி. இராசரத்தினம், உபதலைவர்கள்: திருவாளர்கள்: கே. பரம்சோதி, கே. பாலசிங்கம், ஆர். நவநாயகம், காரியதரிசி: திரு. கே. ஜெயபாலசிங்கம், உபகாரியதரிசி: திரு. ஆர். கலியுகவரதன், தனதிகாரி: திரு. ரி. மகாலிங்கம் கணக்குப் பரிசோதகர்கள்: திருவாளர்கள்: எஸ். ஆறுமுகம், ஜே எம். யோகரத்தினம், எஸ். கமலசிங்கம்.

## ஸ்ரீ பஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கமி ன் ஆரம்பத்தில் விடு 'கேள்விக் கொத்தில்' கேட் டிருந்த கேள்விகளுக்குப் ப ளிக்கும் யோசனைகளைக்கொல... ஒரு அறிக்கையை அவர்கள் கமிஷன் முன் சமர்ப்பித்தனர்.

அதிக பஸ்கள் சேவைக்கு விடப்படவேண்டுமென்றும், சில பகுதிகளுக்கு புதிதாக பஸ் சேவை ஆரம்பிக்கவேண்டுமென்றும் வேறு பல இடங்களுக்கு 'எக்ஸ்பிரஸ்' சேவை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் புதிய பஸ்கள் இந்த சேவைக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஸ் டிப்போவிலும் தொழில் தகராறுகள் 'டிப்போ' சபைக் கூட்டம் கூடித் தீர்க்கப்பட வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகள் சங்கம் சாட்சியம்

பரந்தன் — முல்லைத்வுப் பாதை விவசாயிகள் சங்கத்தினி சார்தல் திருவாளர்கள் ஏ. கந்தையாவும் வி. எம். எஸ். நாதனும் சாட்சியமளித்தனர்.

யாழ்ப்பாணம்-பரந்தன்-முல்லைத்தீவுப் பாதையில் இப்பொழுது குடியேற்றத் திட்டங்கள் பல இருப்பதாகவும் இப் பாதையில் பஸ் சேவை போதாதென்றும் 'வான்' சேவை நடைபெற்றுவருவதாகவும் அதிகபஸ்கள் சேவைக்கு விட வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன் பின் கோப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கத்தின் சார்பில் சங்கக் காரியதரிசியும் கோப்பாய் கிராம சபைத் தலைவருமான திரு. கே. ராஜரத்தினம் சாட்சியமளித்தார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பாதையில் அதிக பஸ்கள் சேவைக்குவிடப்பட வேண்டுமென்றும் பஸ் நிறுத்துமிடங்களும், பிரயாணிகள் தங்கி நிற்கும் நிலையங்களும் அமைக்க வேண்டுமென்றும் புகைக்கும் 'டீசல்' பஸ் வண்டிகள் சுகாதாரத்துக்கு கெடுதியாக உள்ளன வென்றும் ரஸ்தாக்கள் விஸ்தரிக்கப்படுவது அவசியமென்றும் பஸ்கள் குறித்த நேரத்துக்கு புறப்பட வேண்டுமென்றும் திரு. ராஜரத்தினம் தெரிவித்தார். இ. போ. ச. சபை மாதம் ஒரு சஞ்சிகையை வெளியிடவேண்டுமென்றும் திரு. ராஜரத்தினம் சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

## பஸ் சாரதிக்கு ரூ. 100 அபராதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

47 பிரயாணிகளையே ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள இ. போ. ச. பஸ் ஒன்றில் 71 பிரயாணிகளை ஏற்றிச்சென்றதற்காக இ. போ. ச. சாரதி வேலுப்பிள்ளை சபாபதிக்கு யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் ரூ. 100 அபராதம் விதித்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். ஜி. பீட்டர் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

### ரூ. 80 அபராதம்

இ. போ. ச. வைச் சேர்ந்த மற்றொரு பஸ்சாரதி 15 பிரயாணிகளைக் கூடுதலாக ஏற்றிச் சென்றதற்காக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் அவருக்கு ரூ. 80 அபராதம் விதித்தார்.

---

## உதவி ரயில் மந்திரி வெளிநடப்பு

காகிநாடா, அக். 16

ரயில்வே மந்திரி பட்சபாதம் காட்டுகிறாரென்றும், ஆந்திரப் பிரதேசத்திடம் வேற்றுமை பாராட்டுகிறாரென்றும், திறமையில்லாத நிர்வாகமென்றும் காகிநாடா ரயில்வே பிரயாணிகள் சங்கக்கூட்டத்தில் பேசியதையடுத்து உதவி ரயில்வே மந்திரி திரு. எஸ். வி. ராமஸ்வாமி கோபத்துடன் கூட்டத்தைவிட்டு வெளியேறினார். காகிநாடாவை கல்கத்தா பாதையில் சேர்க்கமறுத்தார்.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

மனோஹர், தேவிகா நடித்த

பாஞ்சாலி

கிங்ஸ்லி (கொழும்பு)



வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்
சனி, ஞாயிறு மெட்னி மாலை 2-30-க்கு

கிறிஸ்டியானு-மாட்டெல் கர்லோஸ்பயனு நடித்த

ஆதாமும் ஏவாளும் (ஆங்கிலம்)

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

ரூத்தின் சீவிய சரித்திரம் (ஆங்கிலம்)


## எதிரி வெட்டியதைப்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பவம் நடந்த தினத்தன்று நான் சின்னக்குட்டியின் கடைக்குச் சீனி வாங்குவதற்காகச் சென்றேன். அந்தக் கடைக்கு முன்னால் வாசற்படிக்கருகில் இறந்தவரான ஆனந்தமும் ஜோசேப்பும் நின்றனர். அப்பொழுது அப்புலிங்கமும் மயில்வாகனமும் கையில் கத்தியுடனும், கிரிசுடனும் தெற்குத் திசையாக ஓடிவருவதைப்பார்த்தேன். நான் நின்ற இடத்திலிருந்து 33 அடி தூரத்தில் அவர்கள் ஓடிவரும்போது முதலில் கண்டேன்.

ஜோசப்பும் ஆனந்தமும் கடையைப் பார்த்தவண்ணமாக நின்றனர். அப்புலிங்கமும் மயில்வாகனமும் ஒருவருக்குப் பின் ஒருவராக ஓடி வந்தனர். மயில்வாகனம் ஆனந்தத்துக்கு இடது தோள் மூட்டில் வெட்டுவதைப் பார்த்தேன். ஜோசப்புக்கு வெட்டுவதற்குக் குறி வைத்தபோது அவர் ஓடிவிட்டார். ஆனந்தத்துக்கு அப்புலிங்கம் கத்தியால் குத்த ஓங்கியபோது அவரும் ஓட்டம் பிடிக்கவே அப்புலிங்கமும் அவரைத் தொடர்ந்து ஓடினார். ஆனந்தம் கடையின் தெற்குச் சுவர்ப் பக்கமாக ஓடினார். ஆனந்தத்துக்குப் பின்னால் மயில்வாகனமும் ஓடினார். நான் இவற்றைக் கடை வராந்தையில் பார்த்துக் கொண்டு நின்றேன். நடந்தவற்றை ஜோசப்பின் தாயாரிடம் அறிவித்துவிட்டு சீனியுடன் எனது வீட்டுக்குப் போய் விட்டேன். நாலாம், முதலாம் எதிரிகள் பண்டார வகுப்பைச் சேர்ந்தவர்கள். நானும் ஜோசப்பும் பள்ள வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

எதிரிகள் தரப்பு பிரதம வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. யின் குறுக்கு விசாரணைகளுக்குப் பதிலளிக்கையில் இலட்சுமி கூறியதாவது:-

சின்னத்துரை கடையைச் சுற்றியுள்ள பகுதியில் மயில்வாகனத்தின் வீடுதான் ஒரேயொரு பண்டார வகுப்பைச் சேர்ந்த வீடாகும். சின்னத்துரையும் வேளாள வகுப்பைச் சேர்ந்தவர். மயில்வாகனத்தின் இனத்தவர்கள் ½ கால் மைல் தூரத்தில்தான் இருக்கிறார்கள்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பண்டார வகுப்பைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் பலருக்கும் குத்து வெட்டுக் காயங்கள் ஏற்பட்டதை கடியன் என்பவர் மூலந்தான் அறிந்தேன்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகளையும் மேலும் மூவரையும் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கொன்று அன்று ஒத்திப் போடப்பட்டிருந்தது.

இரு வகுப்பாருக்குமிடையே நீண்ட காலமாகப் பகையிருப்பது எனக்குத் தெரியாது. இரு வகுப்பாரும் நீண்ட காலமாகப் பேசுவதில்லை. கோபத்தினால் தான் இரு வகுப்பாரும் பேசுவதில்லை.

நீதியரசரின் கேள்வியொன்றுக்கு சாட்சி பதிலளிக்கையில் பண்டார வகுப்பினர் தங்களிலும் உயர்ந்த சாதியினர் எனத் தெரிவித்தார். மேல் விசாரணை இந்நிலையில் ஒத்திவைக்கப்பட்டது.

---

## தொழில் மந்திரி இன்று வருகிறார்

கொழும்பு, திங்கள்

தொழில்சமூக சேவாமந்திரி செனட்டர் சரத் விஜயசிங்கா நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்துசேர்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. செனட்டர் விஜயசிங்கா சென்ற மே மாதம் சுகவீனம் காரணமாக லண்டனில் சிகிச்சைக்காகச் சென்றிருந்தார். சென்ற மாத இறுதியில் ரஷ்யா சென்றிருந்தார்.

# தனியூற்றுக் கொலைவழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தனியூற்று கொலை வழக்கு நேற்று நீதியரசர் எச். டபிள்யு. தம்பையாகியூ ஸி முன்னிலையில் நாலாவது தடவையாக விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது இதுவரை ஜூரிகளாகக் கடமையாற்றியவர்களை நீக்கிவிட்டு புதிய ஜூரிகளைக் கொண்ட சபை முன்னர் வடபகுதி அசைஸ் மன்றத்தின் அடுத்த விசாரணைத் தொடரில் விசாரணை நடைபெற வேண்டுமென உத்தரவிட்டார்.

மரியாம்பிள்ளை கந்தசாமி என்பவரை செல்லப்பா செல்லத்துரை என்பவர் குத்திக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி தரப்பில் ஆஜரான திரு. டி. கணேசலிங்கம், ஜூரியில்லாத சமயத்தில் ஒரு சாட்சி அளித்த வாக்குமூலம் கொழும்பிலிருந்து வெளியாகும் தினசரிப் பத்திரிகையொன்றில் வெளிவந்திருப்பதை நீதியரசருக்குச் சுட்டிக்காட்டினார்.

நீதியரசர்:- ஜூரிகள் இல்லாத சமயத்தில் அளிக்கப்படும் சாட்சியங்களைப் பத்திரிகைநிருபர்கள் ஏன் குறிப்பிடவேண்டுமென எனக்குத் தெரியவில்லை.

திரு. கணேசலிங்கம் தாம் வைத்திருந்த பத்திரிகையை நீதியரசரின் பார்வைக்காக அவரிடம் கொடுத்தார்.

நீதியரசர்: விசாரணையை நிறுத்தி புதிய ஜூரிமார் முன்னிலையில் விசாரணையை ஆரம்பிக்கவேண்டியிருப்பது பற்றி நான் வருந்துகின்றேன். ஜூரிமார் இல்லாத சமயத்தில் தெரிவிக்கப்படும் சாட்சியங்களைப் பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது.

---

வடமராட்சி

## தமிழ்க் காங்கிரஸ். முன்னணி தீர்மானங்கள்

உடுப்பிட்டி, செவ்வாய்

'தமிழ்ப் பிரதேசங்களில் அதிகமான வாலிபர்களை சேர்த்து பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும்' என்னும் தீர்மானம் வடமராட்சி தமிழ்க் காங்கிரஸ் முன்னணிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நெல்லியடி மகாத்மா தியேட்டரில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானமும் நிறைவேற்றப்பெற்றது:

'சிங்களப் பிரதேசங்களில் பிரசாரக் கூட்டங்கள் நடத்தி, தமிழ் மக்களின் உரிமைகளை எடுத்து விளக்கவேண்டும்.'

கூட்டத்துக்கு தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. ஆர். ஆனந்தராஜா தலைமை தாங்கினார்.

---

## பாம்புகளால் சுற்றப்பட்ட சடலம்

பகல்பூர், அக். 16

உடல் முழுவதும் உயிருள்ள பாம்புகளால் சுற்றப்பட்ட நிலையில் ஒரு நபரின் சடலம் சமீபத்தில் ஏற்பட்ட கங்கை வெள்ளத்தில் மிதந்து வந்தது. பகல்பூர் ஜில்லாவில் ராஜ்பூர்-பியா கிராமத்தில் இச்சடலம் கங்கை நதியில் மிதந்து வந்தது காணப்பட்டது.

மற்றொரு பரிதாபகரமான காட்சி, இளம் தம்பதிகளின் சடலங்கள் ஒருவருக்கொருவர் கைகோர்த்த வண்ணம் குழந்தையைத் தாய் அணைத்துக் கொண்ட நிலையில் மிதந்துவந்ததாகும். கடந்த செவ்வாயன்று பகல்பூர் ஜில்லாவில் அம்மாபூர் கிராமத்தில் இப்பரிதாபகரமான காட்சி காணப்பட்டது.

## புத்தூர் கல்லூரியில் பரிசளிப்பு விழா

நீர்வேலி, திங்கள்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், ஸ்தாபகர் ஞாபகார்த்த தினமும் வியாழக்கிழமை மாலை கொண்டாடப் படவிருக்கின்றன. இக்கல்லூரியின் முன்னாள் அதிபரான யாழ்ப்பாணகல்வியதிகாரி திரு. கே. தணிகாசலம் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவாரெனத் தெரிகிறது.

ஸ்தாபகர் ஞாபகார்த்தச் சொற்பொழிவும் இதில் முக்கிய இடம்பெறும்.

---

## தி. மு. க. கவுன்ஸிலர் கத்திக்குத்து

### சம்பவ எதிரொலி

சென்னை, அக். 16

சென்னை கார்ப்பரேஷன் தி. மு. க. அங்கத்தவர் திரு. எஸ். கபாலி கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்தை யடுத்து பெரியமேடு பகுதியில் கலவரம் ஏற்பட்டதால் நேற்று கைதுசெய்யப்பட்ட 46 பேரில் மதுவிலக்கு குற்றங்களுக்காக 39 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் இக்கத்திக்குத்து சம்பவம் சம்பந்தமாக 7 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

---

## கொரில்லாப்போர் நடக்குமாம்!

லண்டன், அக். 16

அல்ஜீரியப் புரட்சியாளர்கள் பிரான்சுக்கு எதிராகச் செய்வதுபோல ஆஸாத் காஷ்மீர் இந்தியாவை எதிர்த்துக் கொரில்லாப்போர் நடத்தும் என்றும், ரகசிய நாசவேலை இயக்கத்தைத் தொடங்குமென்றும் குர்ஷித் தெரிவித்தார். இத்தகைய இயக்கத்தை அயூப்கான் ஆதரிக்காமலிருப்பார் என்பதற்கு அறிகுறிகள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். அயூப்கான் தமக்கு ஆறுதல் அளித்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## புடாபெஸ்டில் ராதாகிருஷ்ணன்

புடாபெஸ்ட், அக். 16

இந்திய உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்றிரவு புடாபெஸ்ட் வந்துசேர்ந்தார். ஹங்கேரி உபஜனாதிபதி அவரை விமானநிலையத்தில் வரவேற்றார்.

---

## மகாநாடு ஒத்திவைப்பு

லண்டன், அக். 16

லண்டனில் இவ்வாரம் நடைபெறவிருந்த மேற்குநாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகளின் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. பிரான்சின் ஆட்சேபனையே இதற்குக்காரணமெனத் தெரியவருகிறது.

---

## விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

கொழும்பு மாநகரசபைலஞ்ச விசாரணைக் கமிஷன், மாநகர சபை அங்கத்தவர்கள் சாட்சியமளிப்பதற்கு சிறிதுகால அவகாசம் அளித்துள்ளது.

சென்ற புதன்கிழமைக்கு முன்னர் மேற்படி விசாரணையில் சாட்சியமளிக்குமாறு அங்கத்தவர்கள் முன்புகேட்கப்பட்டிருந்தனர்.

சில அங்கத்தவர்கள் தமக்கு அவகாசம் அளிக்கப்படவேண்டுமெனக் கேட்டிருந்ததன்பேரிலேயே இவ்வித ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.